தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

₹ 15/- | மலர் 17 - இதழ் 03 - ஜூலை 2015 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

தமிழக போக்குவரத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக

சென்னை மெட்ரோ இரயில்

அனைத்து வங்கி சேவைகளும் ஒரே இடத்தில்...
பாரதீய மகிளா வங்கி லிமிடெட்.

உங்கள் சேமிப்பிற்கு அதிக வருவாய்.

BMB SAVINGS
சேமிப்புக் கணக்கு

5%* p.a
₹1 லட்சத்துக்கும் அதிகமான தொகைக்கு

4.5% p.a
₹1 லட்சம் வரை

*வங்கிக் கணக்கில் உள்ள மொத்த தொகைக்கும் 5%

BMB SAVINGS
சேமிப்புக் கணக்கு

BMB SILVER SAVINGS
சேமிப்புக் கணக்கு

BMB GOLD SAVINGS
சேமிப்புக் கணக்கு

BMB Komal Kali

உங்களின் மகளுக்கு சுதந்திரத்தின் சிறகுகளை அளித்திடுங்கள்

பெண் குழந்தைகளுக்கு சுய அதிகாரம் வழங்கும் ஒரு புதுமையான ரெக்கரிங் டெபாஸிட்

• வயது : ஒரு நாள் குழந்தை முதல் 15 வயது வரை • குறைந்தபட்ச மாதாந்திர முதலீடு ரூ. 50 அல்லது அதற்கும் அதிக தொகை, மிகச் சரியாக ரூ. 50-ன் பெருக்குத் தொகை • மாதத் தவணையை மாதத்தின் எந்த தேதியில் வேண்டுமானாலும் செலுத்தும் வசதி • காலம் : 3 ஆண்டுகள் முதல் பத்தாண்டுகள் வரை • கடன் வசதி உண்டு : மொத்த மதிப்பின் 85% (தனி நபர் விபத்து காப்பீடு) • TDS இல்லை

இணையதளம்: www.bmb.co.in
https://bmbsmartbanking.co.in/netbanking

பிஎம்பி
பாரதீய மகிளா வங்கி
மகளிருக்கு சுய அதிகாரம், பாரதத்தின் சுய அதிகாரம்.
முற்றிலும் இந்திய அரசுக்குச்சொந்தமானது

BMB
BHARATIYA MAHILA BANK
Empowering Women, Empowering India.
Wholly owned by Govt. of India

சென்னை கிளை : ஓவர்சீஸ் டவர்ஸ், 756-L, அண்ணா சாலை,
சென்னை - 600 002. தொலைபேசி : 044 28523321

கோயமுத்தூர் கிளை : தேவராஜன் சென்டர், ஐயப்ப பூஜா சங்கம் அருகில், 206/1,
சத்யமூர்த்தி ரோடு, ராம்நகர், கோயமுத்தூர் - 641 009 தொலைபேசி : 0422-4373749/29

திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

அன்பு தோழிகளே,

வாழ்க்கையில் வெற்றி பெற விரும்பாதவர்கள் யார் உள்ளனர்? அனைவருக்குமே அந்த ஆசை உண்டு. ஆனால் ஆசை மட்டும் போதுமா? அதற்கான குணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் அல்லவா? அதைப் பற்றி இந்த இதழில் பார்க்கலாம்.

நாம் வாழ்க்கையை திறம்பட அமைத்துக் கொள்ள, தன்னம்பிக்கை, விடாமுயற்சி, கடின உழைப்பு, ஒற்றுமை ஆகிய குணங்கள் அவசியம் வேண்டும். இதை உணர்ந்து செயல்பட்டு வருவதால் தான், இன்று தமிழ்நாட்டில் ஆறு இலட்சம் சுய உதவிக் குழுக்கள் இருக்கின்றன. வீட்டில் மட்டும் அல்லாமல், பணிபுரியும் இடத்திலும் குழுவாக செயல்படுவது பல வெற்றிகளைக் கொண்டு வந்து சேர்க்கும்.

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுத்த கதையை நாம் கேள்விப்பட்டு இருப்போம். அமிர்தம் தோன்றிய பிறகு, அதை உண்டு சாகாவரம் பெற விரும்புபவர்களுக்கு திருமால் ஒரு நிபந்தனை விதித்தார்.

'அமிர்தம் உண்ண விரும்புபவர்கள் அவர்களின் கையை மடக்கக் கூடாது' என்ற நிபந்தனையை விதித்தார். 'இது எப்படி சாத்தியம்?' என்று அசுரர்கள் குழம்பிக் கொண்டு இருக்கும் நேரத்தில் தேவர்கள் எதிர் எதிரே அமர்ந்து கொண்டு ஒருவருக்கு ஒருவர் நீட்டிய கையை மடக்காமல் அமிர்தத்தை ஊட்டி விட்டனர்.

இப்படி பல சம்பவங்கள் புராண கதைகளாகவும், பஞ்சதந்திர கதைகளாகவும் நமக்குள்ளே உலவி வருகின்றன. இவைகளில் இருந்து நாம் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். இந்த புராணக் கதைகள் சொல்லும் நீதி என்ன?

சர்வ வல்லமை பொருந்திய தேவர்களே ஆனாலும் ஒற்றுமையாக இருந்தால் தான் அமிர்தத்தை உண்ண முடிந்தது. தாத்தா–பாட்டி, அப்பா–அம்மா, அண்ணன்-தம்பி, அக்கா–தங்கை, கணவன்–மனைவி, மகன்–மகள் என்று பல உறவுகள் சேர்ந்து ஒற்றுமையாக வாழ்வது தானே குடும்பம். 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்ற வாக்கியம் குடும்பத்திற்கு மட்டும் இல்லை அலுவலகத்திற்கும் பொருந்த கூடியது தான்.

குறைகளே இல்லாத மனிதர்கள் என்று யாருமே இல்லை. அப்படி குறைகள் இல்லாத மனிதனிடம் மட்டும் தான் பழகுவேன் என்றால் நமக்கு நண்பர்கள், உறவினர்கள் என்று யாருமே இருக்க முடியாது. வாழ்நாள் முழுவதும் தேடிக் கொண்டே இருக்க வேண்டியதுதான்.

> குணம் நாடி குற்றமும்நாடி அவற்றுள்
> மிகை நாடி மிக்ககொளல்
> என்ற குறள் கூறும் தத்துவத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் படிப்பில், வசதியில் உயர்வான இடத்தில் இருந்தாலும், நம்மை பிறருடன் ஒப்பிட்டு பார்த்து குறை கண்டுபிடிக்கும் நோக்கத்தை கைவிட்டு, அருகே இருக்கும் மக்களுடன் நல்லுறவினை வளர்த்துக் கொண்டால் வெற்றி என்றும் நம் கையில்!

பூதக்கண்ணாடி கொண்டு குறைகளைப் பார்ப்பதைத் தவிர்ப்போம்.

உறவுகளை நல்லிணக்கத்துடன் கையாளுவோம். வாழ்வில் இனிமை சேர்ப்போம்.

வாழ்வில் வெற்றிக் கொடி ஏற்றுவோம். மீண்டும் சந்திப்போம்.

என்றும் அன்புடன்,

மேலாண்மை இயக்குநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

மலர் 17–இதழ்–03–ஜூலை–2015

விலை ரூ. 15/–

கௌரவ ஆசிரியர்

வே. அமுதவல்லி, இ.ஆ.ப.,

மேலாண்மை இயக்குநர்

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்

எஸ். சின்னப்பன்

செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்

டபிள்யூ. சிராஜுன்னிசா

பொது மேலாளர்

ஆசிரியர் குழு

டி. ஆர். வேதநாயகம்

கூடுதல் இயக்குநர்

எம். மாதவி

கூடுதல் இயக்குநர்

புது வாழ்வு திட்டம்

எல். ராஜா

கூடுதல் திட்ட இயக்குநர்

ஆர். ராஜசேகர்

கூடுதல் திட்ட இயக்குநர்

மோ. கணேஷ்குமார்

தகவல் தொடர்பு வல்லுநர்

பொறுப்பாசிரியர்

ப. கலைமதி

மக்கள் தொடர்பு அலுவலர்

துணை ஆசிரியர் முற்றம்

ஏ. கண்ணன்

முதுநிலை கணக்காளர்

சு. சசிகலா

பிழை திருத்துபவர்

எஸ். எஸ். ரவிச்சந்திரன்

கணினி வடிவமைப்பு (ஒப்பந்தம்)

மு. செல்வம்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

ஆசிரியர், 'முற்றம்'

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்,

அன்னை தெரசா மகளிர் வளாகம்,

வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை

நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

தொலைபேசி: 044–2817 3412 / 3413

தொலைநகல்: 044–2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து...

நிலையான சுதந்திரம்...

அன்புள்ள வாசகர்களுக்கு,

பல நூறு ஆண்டுகள் அந்நியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு, ஆட்சி செய்யப்பட்ட நம் இந்திய பூமி இன்று சுதந்திர காற்றை முழுமையாக சுவாசித்துக் கொண்டிருக்கிறது. மக்கள் அடிமைப்பட்டு கிடந்தனர், நாட்டின் செல்வங்கள் பெருவாரியாக கொள்ளையடிக்கப்பட்டன. வளர்ச்சி என்ற பேச்சுக்கு இடமே இல்லை. இக்கொடுமைகளை பொறுக்க முடியாமல் இந்திய நாட்டை அந்நியர்களிடமிருந்து விடுவிக்க தொடர் போராட்டங்கள் பல்வேறு வடிவங்களில் நடத்தப்பட்டன. பலர் தங்கள் உயிரையும், உடைமைகளையும் இந்த நாடு சுதந்திரம் பெறுவதற்காகத் தியாகம் செய்தனர்.

மக்களிடையே சுதந்திர எழுச்சி வலுப்பெற்று வருவதைக் கண்டு அஞ்சிய வெள்ளையர்கள் வேறு வழியின்றி நம் நாட்டை விட்டு வெளியேற நேர்ந்தது. இந்த வரலாற்று சிறப்பு மிக்க தினமான ஆகஸ்ட் 15ஆம் தேதியை இந்திய சுதந்திர தினமாக தவறாமல் கொண்டாடி வருகிறோம்.

இன்று இந்தியா ஒரு சுதந்திர நாடு, மிகப் பெரிய ஜனநாயக நாடு. உலக அரங்கில் முக்கியத்துவம் பெற்றுள்ள நாடு. வளர்ச்சியை நோக்கி வேகமாக சென்று கொண்டிருக்கும் நாடு. மிக அதிக அளவு மக்கள் தொகை கொண்ட நாடு. வல்லரசு நாடுகளின் பட்டியலில் இடம் பெறும் அளவிற்கு வளர்ந்துள்ள நாடு. இவ்வகையில் அபரிமிதமான வளர்ச்சியைப் பெற்று விட்டோம் என நாம் திருப்தி அடைந்து விடவும் முடியாது. இந்த வளர்ச்சியானது நிலைத்த தன்மையை அடைய வேண்டும். சுதந்திரத்தை அளவிற்கு மீறி அனுபவிக்க முனைந்தால் நாட்டின் வளர்ச்சி நிலைகுலைந்து மிகப்பெரிய ஆபத்தை சந்திக்க நேரிடும்.

நம் நாட்டின் இயற்கை வளங்கள் கொள்ளை போக அனுமதிக்கக் கூடாது. மண்டிக் கிடக்கும் மகத்தான மனித வளம் முறையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். அறிவியலின் வளர்ச்சி ஆக்கப்பூர்வமான பணிகளுக்கு மட்டும் அளவோடு பயன்படுத்தப்பட வேண்டும். சமூக நல பண்புகளையும், தன்னம்பிக்கையையும், சுய வேலைவாய்ப்பைக் கொடுக்கும் கல்வி முறைக்கும் முக்கியத்துவம் தரப்பட வேண்டும். மற்றும் சமூகத்தைப் பிரிக்கும் சக்திகள் அனைத்து தரப்பினராலும் ஓரங்கட்டப்பட வேண்டும்.

ஊடகங்கள் மக்கள் மத்தியில் நேர்மறையான கருத்துக்களை எடுத்து சென்று நம்பிக்கையையும், பாதுகாப்பு உணர்வையும் ஏற்படுத்த வேண்டும். இதுவே சுதந்திர இந்தியாவைக் காக்க நாம் செய்ய வேண்டிய முக்கியக் கடமைகளாகும்.

அனைவருக்கும் முற்றம் தனது சுதந்திர தின வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது.

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

केनरा बैंक
(भारत सरकार का उपक्रम)

Canara Bank
(A Government of India Undertaking)
Together We Can

Have you linked your bank account to your Aadhaar number?

Aadhaar Seeding is easy!
Choose any one of the following options

- Visit www.canarabank.com & opt for linking of Aadhaar & status verification
- Send SMS to 5607060 from your registered mobile: CAN <space> AADHAAR <space> 13 Digit A/c Number <space> 12 Digit AADHAAR NUMBER
- Feed Aadhaar request at ATMs
- Dial Call Center No. 1800 425 0018 and furnish your Account Number and Aadhaar Number
- Net Banking for Internet Banking, customers can log in through their Net Banking Account and submit request

Customers may also visit Canara Bank branch and seed Aadhaar number.

For details, contact your nearest branch or log on to www.canarabank.com

Scan for online facilities

On linking, you will receive a confirmation sms from us.

In case you do not have an account, you can open a new Account with Aadhaar copy

स्वच्छ भारत
एक कदम स्वच्छता की ओर

Toll Free: 1800 425 0018 | Save Trees. Save Water. Save Environment. | www.canarabank.com

உள்ளே...

வால்பாறை 8

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சென்னை மெட்ரோ இரயில் சேவை துவக்கம் 10

தொழிற்பயிற்சிகள் தொடக்க விழா 12

வளம் பெறச் செய்த மீன் வலைகள் 15

ரோஜா இதழ் 17

சிறப்புத் திட்டம் அறிமுகப் பயிற்சி 22

புதுவாழ்வு 29

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகிறது.

சமையல் சிலிண்டர் குறித்த செய்திகள், சிறு குறிப்புகள், வெற்றிக் கதைகள், அழகுக் குறிப்புகள், மாவட்ட செய்திகள், அரசு செய்திகள் என முற்றம் இதழில் இடம் பெற்றுள்ள அனைத்தும் சிறப்பாக உள்ளன.

ஸ்ரீ மகா சகோதர வாழ்வு சங்கம்,
மகாராஜபுரம் பஞ்சாயத்து,
கொட்டாரம், கன்னியாகுமரி மாவட்டம்.

முற்றம் இதழில் இடம் பெற்றுள்ள பொது செய்திகளும், குறிப்புகளும், கட்டுரைகளும், மகளிர் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த செய்திகளும் சுய உதவிக் குழு மகளிருக்கும், பிறருக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. முற்றத்திற்கு எங்கள் குழுவின் சார்பில் பாராட்டுகள்.

நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்,
தமிழ்த்தாய் மகளிர் சுய உதவிக் குழு,
திருவையாறு, தஞ்சை மாவட்டம்.

புதுவாழ்வு திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் செயல்பாடுகளால் கிராமப்புற மக்கள் வளமான வாழ்வு பெற்று வருகின்றனர். அவர்களுக்கு வழங்கப்படும் உதவிகள் குறித்த செய்திகள் எங்களுக்கு ஊக்கமளிப்பதாக இருக்கிறது.

உறுப்பினர்கள்,
கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்,
பொம்மிடி, தருமபுரி மாவட்டம்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் வளம் பெற்று வரும் ஏழை எளிய மக்கள் குறித்த செய்திகளும், அவர்களின் வாழ்வாதரம் வளம் பெற்றுள்ள வெற்றிக் கதைகளும் திட்டம் பெற்றுள்ள வெற்றியை அனைவருக்கும் அறியச் செய்வதில் முற்றம் இதழ் சிறப்பாக செயலாற்றுகிறது.

உறுப்பினர்கள்,
கடல் மீன்கள் மகளிர் சுய உதவிக் குழு,
சில்வர் பீச், கடலூர் மாவட்டம்.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

சர்வதேச இளைஞர் தினம் (ஆகஸ்ட் 12)

ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதம் 12ஆம் தேதியை சர்வதேச இளைஞர்கள் தினமாக கடைப்பிடிக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை அனைத்து நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுத்தது. அதன்படி 2000ஆம் ஆண்டு முதல் ஆகஸ்ட் மாதம் 12ஆம் தேதியன்று சர்வதேச இளைஞர்கள் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. உலக சமூகத்தில் இளைஞர்களின் முயற்சிகளை அங்கீகரிப்பதும், தத்தமது சமூகங்களுக்கு சாதகமான பங்களிப்பை வழங்கும் வகையில் அவர் களது செயல்பாடுகளை ஊக்குவிப்பதும் சர்வதேச இளைஞர்கள் தினத்தை கடைப்பிடிப்பதன் நோக்கமாகும். 15 முதல் 24 வயது வரையிலான பிரிவினரை இளைஞர்கள் என்று ஐக்கிய நாடுகள் வரையறுக்கிறது. உலக மக்கள் தொகையில் இந்தப் பிரிவினர் கணிசமான அளவில் உள்ளனர். வளர்ந்து வரும் நாடுகளில் இளைஞர்கள் அதிக அளவில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. ■

உலக மனிதநேய தினம் (ஆகஸ்ட் 19)

சர்வதேச அளவில் ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதம் 19ஆம் தேதி உலக மனிதநேய தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. போர், நோய், சத்துக் குறைவு, இயற்கைப் பாதிப்பு போன்ற காரணங்களால் பாதிக்கப்பட்ட மக்களை நினைவு கூருவதற்கும், இது போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்பவர்களை கௌரவிக்கும் தினமாகவும் உருவாக்கப்பட்டதுதான் உலக மனித நேய தினம்.

ஐக்கிய நாடுகள் சபையால் 2008ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட இத்தினம், 2009ஆம் ஆண்டு முதல் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. நாடு மற்றும் வீட்டைத் துறந்து அதரவற்றோர்களுக்கு உதவி மற்றும் சேவை செய்பவர்கள் மனிதநேயப் பணியாளர்கள் எனப்படுகின்றனர். இந்தத் தினத்தை உலக நாடுகளின் அரசாங்கங்களும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையும், அரசு சார்பற்ற நிறுவனங்களும், மனிதநேய அமைப்புகளும் இணைந்து உலகளவில் அனுசரித்து வருகின்றனர். மனிதநேயம் என்பது மனித வாழ்க்கையில் மிக உத்தமமான ஓர் உணர்வு, இந்த உணர்வை இந்த சிறப்பு மிகுந்த தினத்தில் நம்முள் நுழைத்து, நாமும் மனிதநேயர்களாக மாற உறுதிமொழி எடுப்போம். ■

தினம்...தினம்...

தேசிய விளையாட்டு தினம் (ஆகஸ்ட் 29)

நம் இந்திய நாட்டுக்காக ஹாக்கி விளையாடிய திரு. தயான்சந்த் என்பவரின் பிறந்த தினமான ஆகஸ்ட் 29ஆம் தேதியே தேசிய விளையாட்டு தினமாக நம்நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. உத்தரப்பிரதேச மாநிலம், அலகாபாத் நகரில் 1905ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29ஆம் தேதி திரு. தயான்சந்த் பிறந்தார். இந்திய இராணுவத்தில் பணிபுரிந்து வந்த இவரின் தந்தையார், இராணுவ ஹாக்கி அணிக்காக விளையாடியிருக்கிறார். 1922ஆம் ஆண்டு இராணுவத்தில் சேர்ந்த திரு. தயான்சந்தும் 192 ஆம் ஆண்டு வரை இராணுவ ஹாக்கி அணிக்காக விளையாடியிருக்கிறார். பின்னர் 1934ஆம் ஆண்டு இந்திய ஹாக்கி அணியின் கேப்டனாக தேர்வு செய்யப்பட்டார்.

இவரது தலைமையில் இந்திய ஹாக்கி அணி, 1928 (ஆம்ஸ்டர்டாம்), 1932 (லாஸ்ஏஞ்செல்ஸ்), 1936 (பெர்லின்) ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்றது. 1000 கோல்களுக்கு மேல் அடித்த திரு. தயான்சந்த் அவர்களுக்கு, 1956ஆம் ஆண்டு இந்திய அரசு பத்மபூஷண் விருது வழங்கி சிறப்பித்தது. ஹாக்கி வீரர் ஒருவர் இந்த விருதை பெறுவது இதுவே முதல் முறை.

இவர் 1952ஆம் ஆண்டு 'கோல்' என்ற பெயரில் சுய சரிதையை எழுதினார். பல்வேறு சிறப்புகளையும் பெற்ற திரு. தயான்சந்த், 1979ஆம் ஆண்டு டிசம்பர் 3ஆம் தேதி மறைந்தார். ■

வால்பாறையில் உள்ள சுற்றுலாத் தலங்களைக் காண அதிக அளவில் மக்கள் வருகை தருகின்றனர்

வால்பாறை
வனப்பும் செழிப்பும் நிறைந்த சுற்றுலா தலம்

கோவை மாவட்டத்தில் உள்ள சுற்றுலா தலங்களில் முக்கிய இடமாக வால்பாறை உள்ளது. வால்பாறையை மையமாகக் கொண்டு அதைச் சுற்றிலும் சுமார் 20க்கும் மேற்பட்ட இடங்கள் சுற்றுலாத் தலங்களாக உள்ளன. கோவையில் இருந்து 100 கி.மீ. தூரத்திலும், பொள்ளாச்சியில் இருந்து 60 கி.மீ. தூரத்திலும் உள்ள வால்பாறைக்கு பல்வேறு இடங்களில் இருந்து பேருந்து வசதியுள்ளது.

பார்க்கும் இடமெங்கும் பசுமையான தேயிலை தோட்டங்களும், வழியெங்கும் வானுயர்ந்த மரங்கள் நிறைந்த காடுகளும், துள்ளி ஓடும் சிற்றாறுகளும் நிறைந்த வால்பாறையில் பாலாஜி கோவில், பூங்கா, அக்காமலை புல்வெளி, வெள்ள மலை டனல், சின்னக்கல்லார் அணை மற்றும் நீர்வீழ்ச்சி, கீழ் நீரார் அணை, கூலாங்கல் ஆறு, லில்லோனி பள்ளத்தாக்கு, மானாம்பள்ளி நீர்மின்உற்பத்திநிலையம்,மீன்பாறைஆறு,சோலையாறுஅணை, அதிரப்பள்ளி பால்ஸ், நல்லமுடி பூஞ்சோலை, ஹைபாரஸ்ட், நம்பர் பாறை காட்சிமுனை, புதுத்தோட்டம், கவர்க்கல் அருவி, லோம்ஸ் காட்சிமுனை, குரங்கு அருவி, ஆழியார் ஆணை போன்ற பல்வேறு இடங்கள் சுற்றுலாப் பயணிகளுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும்.

வால்பாறை சுற்றுலா தலங்களின் சிறப்புகள்

பாலாஜி கோவில் – பூங்கா

வால்பாறையிலிருந்து 8 கி.மீ. தொலைவில் அக்காமலை செல்லும் சாலையில் கருமலை எஸ்டேட்டில் பாலாஜி கோவில் அமைந்துள்ளது. கோவிலைச் சுற்றி நூற்றுக்கணக்கில் வளர்ந்துள்ள பல்வேறு வண்ண பூச்செடிகளில் பூத்துள்ள மலர்கள் காண்பவர்களின் கண்ணைக் கவரும். இங்கு சிறுவர்கள் பூங்காவும் அருகில் வேளாங்கண்ணி சர்ச்சும் அமைந்துள்ளது.

அக்காமலை புல்வெளி

பாலாஜி கோவிலில் இருந்து 7 கி.மீ. தொலைவில் அக்காமலை புல்வெளி அமைந்துள்ளது. ஐரோப்பிய நாடான சுவிட்சர்லாந்தில் உள்ளது போல் அழகான புல்வெளி இது. மலைப்பகுதி எங்கும் இளம்பச்சை நிறத்தில் காணப்படும். வனத்துறை அனுமதி பெற்று, வனத்துறையினரின் பாதுகாப்போடுதான் இங்கு செல்ல முடியும். அனுமதி கிடைக்காதவர்கள் கருமலை ரோட்டில் இருந்து தூரத்தில் தெரியும் அக்காமலை புல்வெளியை ரசிக்கலாம்.

வெள்ளமலை டனல்

கருமலையில் இருந்து 5 கி.மீ. தொலைவில் சிறுகுன்றா சாலையில் வெள்ளமலை டனல் உள்ளது. சின்ன கல்லார் அணையில் இருந்து சுமார் 1 கி.மீ. தூரத்திற்கு மலையைக் குடைந்து அமைக்கப்பட்ட குகைக் கால்வாய் வழியாக நீர் பாய்ந்தோடி வருவதை இங்கு காணலாம்.

சின்னக்கல்லார் அணை

வெள்ளமலை டனலில் இருந்து 17 கி.மீ. தொலைவில் சின்னக் கல்லார் அணை உள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலையில் பெய்யும் மழை நீரை சேமிப்பதற்காகக் கட்டப்பட்ட இந்த அணையில் இருந்து குகை கால்வாய் வழியே தண்ணீர் செல்கிறது.



சின்னக்கல்லார் நீர்வீழ்ச்சி

சின்னக்கல்லார் அணையில் இருந்து 2 கி.மீ. தூரத்தில் சின்னக் கல்லார் அருவி அமைந்துள்ளது. தென்னிந்தியாவில் அதிக மழை பொழியும் இடம் இதுவாகும். வனப்பகுதியில் அமைந்துள்ள இந்த நீர்வீழ்ச்சிக்கு செல்ல மரத்தால் அமைக்கப்பட்டுள்ள தொங்கு பாலம் வழியே செல்ல வேண்டும்.

கீழ் நீரார் அணை

சின்னக் கல்லார் நீர்வீழ்ச்சியில் இருந்து 12 கி.மீ. தூரத்தில் அடர்ந்த வனப்பகுதிக்குள் அமைந்துள்ள கீழ் நீரார் அணை மிகவும் அழகாக இருக்கும்.

கூழாங்கல் ஆறு

கீழ் நீரார் அணையில் இருந்து 8 கி.மீ. தூரத்தில் வால்பாறை ரோட்டில் தேயிலைத் தோட்டங்களுக்கு இடையில் கூழாங்கல் ஆறு ஓடுகிறது. கூழாங்கற்கள் நிறைந்துள்ள இந்த ஆற்றில் சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சியுடன் குளிக்கலாம். இங்கிருந்து 3 கி. மீ. தூரத்தில் வால்பாறை உள்ளது.

குரங்கு அருவி

வால்பாறைக்கு போகும் மலைப்பாதையில் குரங்கு அருவி உள்ளது. அடர்ந்த காட்டின் நடுவே அமைந்துள்ள இந்த அருவியில் ஆண்டு முழுவதும் தண்ணீர் விழுகிறது. சிறுவர் முதல் பெரியவர்கள் வரை இந்த அருவியில் பாதுகாப்பாக குளிக்கலாம்.

ஆழியார் அணை

வால்பாறையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது ஆழியார் அணைக்கட்டு. மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாக உள்ள இந்த அணைக்கட்டில் ஏராளமான திரைப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த அணைக்கு அருகே அமைந்துள்ள சிறுவர் பார்க்கில் சிறுவர்களுக்கான விளையாட்டு சாதனங்கள் ஏராளமாக உள்ளன.

மேற்கண்ட இடங்கள் மட்டுமின்றி வால்பாறை மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் ஏராளமான சுற்றுலாத் தலங்கள் உள்ளன. அவைகளைக் கண்டு களிக்க ஒருமுறை வால்பாறை போய் வாருங்கள். மனதிற்கினிய அனுபவங்களைப் பெறுவீர்கள். ■



சரஸ்வதியின் சபதம்...

(நாடகம்)

சென்ற இதழ் தொடர்ச்சி...

வீராசாமி: அய்யா மாற்றுத் திறனாளிகளுக்கு சொந்தமா தொழில் செய்ய கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் வட்டியில்லா கடன் உதவி செய்யறதா சொன்னீங்க, சந்தோஷம். இப்ப ஏதோ 'ஒத்த தொழில் குழு' ஆரம்பிக்கணும்னு சரஸ்வதி அம்மா சொன்னாங்க. அதபத்தி கொஞ்சம் விளக்கமா சொன்னா...

ஊராட்சி மன்றத் தலைவர்: வீராசாமி இந்த 'ஒத்த தொழில் குழு' திட்டத்தைப் பற்றி நம்ம சரஸ்வதி உங்களுக்கு விளக்கமா எடுத்துச் சொல்லுவாங்க. வாம்மா சரஸ்வதி...

சரஸ்வதி: அனைவருக்கும் வணக்கம். கிராமப்புறத்தில் இருக்கிற ஏழை எளிய மக்கள் பொருளாதார ரீதியாக உயர்ந்து, சமூகத்தில் ஒரு நல்ல அந்தஸ்தைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் நம்ம தமிழக அரசு பல திட்டங்களை செயல்படுத்துறாங்க. அதுல ஒரு திட்டம்தான் 'ஒத்த தொழில் குழு' என்கிற திட்டம். அதாவது ஒரு கிராமத்தில் யாரெல்லாம் ஒரே தொழிலை செய்யறாங்களோ அவங்களை ஒண்ணு சேர்த்து, ஒரு 'குழுவை' உருவாக்கி, அந்தக் 'குழு' மூலம் அனைவரும் ஒன்று சேர்ந்து, கூட்டாக அதே தொழிலை சிறந்த முறையில் செய்யணும் அப்படிங்கறதுதான் இத்திட்டத்தின் நோக்கம். ஒரு தொழிலை தனித்தனியா செய்யறதவிட கூட்டா சேர்ந்து செய்யறதால பல நன்மைகள் உண்டு. 20 பேர் உற்பத்தி செய்யுற பொருளை ஒன்று சேர்க்கும் பொழுது அளவு அதிகமாக இருக்கும். உற்பத்தி அளவு அதிகமா இருந்தா, அதை வாங்குறதுக்கு போட்டிப் போட்டுக் கொண்டு வியாபாரிகள் வருவாங்க. அப்ப நம்ம உற்பத்தி பொருளுக்கு விலையை நாமே பேரம் பேசி, அதிக விலைக்கும் விற்கலாம். அதுமட்டுமல்ல நம்முடைய உற்பத்திப் பொருளுக்குத் தேவையான மூலப் பொருட்கள் மற்றும் உப பொருட்களை 20 பேருக்கும் சேர்த்து மொத்தமா பெரிய வியாபார கடையில் வாங்கும் போது, அங்கேயும் பேரம் பேசி விலையை குறைச்சி வாங்கலாம். ஆக நாம் எல்லோரும் ஒற்றுமையா இருந்தா...

வீராசாமி: அம்மா... 20 பேரும் சேர்ந்து ஒரு வேலையை செய்யும் பொழுது வேலை பளுவும் குறையும். ஒருத்தருக்கு ஒருத்தர் ஒத்தாசையா இருந்து உதவியும் செய்துக்கலாம். இல்லையா அலமேலு...

அலமேலு: ஏய் மண்டு மாமா... இந்தக் குழு ஒன்லி 'மகளிர் மட்டும்'. ஆண்களுக்கு வேலை இல்லை. தெரிஞ்சுதா?

வீராசாமி: உழைக்கும் தோழிகளே ஒன்று சேருங்கள். உலகம் நமது என்று சிந்து பாடுங்கள்... ■

(கூட்டம் தொடரும்)

டாக்டர். P. துரைராசன்,
கால்நடை மருத்துவர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
சென்னை.

அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் மெட்ரோ இரயில் போக்குவரத்து அமைந்துள்ளது.

சென்னையில்

தமிழக போக்குவரத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக சென்னை மெட்ரோ இரயில் சேவையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்

சென்னையில், கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரையிலான 10.15 கி.மீ. உயர்த்தப்பட்ட வழித்தடத்தில் சென்னை மெட்ரோ இரயிலின் பயணிகள் சேவையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 29.06.2015 அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். மேலும் சென்னை மெட்ரோ இரயிலின் கோயம்பேடு பணிமனை மற்றும் கோயம்பேடு, புறநகர்ப் பேருந்து நிலையம், அரும்பாக்கம், வடபழனி, அசோக்நகர், ஈக்காட்டுத்தாங்கல், ஆலந்தூர் ஆகிய மெட்ரோ ரயில் நிலையங்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், ஜப்பான் நாட்டிற்கான சென்னையில் உள்ள தலைமைத் துணைத்தூதர், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் துணைத் தலைமை இயக்குநர், மத்திய நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தின் இணைச்செயலாளர், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர், தமிழ்நாடு அரசு ஆலோசகர், திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு

மெட்ரோ இரயில்அனைத்துத் தரப்பு மக்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

முயற்சிகள் துறை முதன்மைச் செயலாளர், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரையிலான 10.15 கி.மீ. தூரத்தை விரைவாகவும், சிரமமின்றியும் பொதுமக்கள் கடந்து செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ள மெட்ரோ இரயில் பாதை, அனைத்துத் தரப்பு மக்களுக்கும் ஒரு வரப் பிரசாதமாக அமைந்துள்ளது என்று அனைவரும் பாராட்டுகின்றனர். ■

தமிழில் படித்து 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் முதலிடம் பெற்ற மாணவ – மாணவியருக்கு ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்

ஆண்டுதோறும் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பில் தமிழை மொழிப்பாடமாகக் கொண்டு, அரசு பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்களைப் பெற்று, மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ–மாணவிகளுக்கு காசோலைகள், பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி, அவர்களின் மேற்படிப்புகளுக்கான செலவினையும் தமிழ்நாடு அரசே ஏற்றுக் கொள்கிறது.

இதன்படி பள்ளிக் கல்வித்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, வனத்துறை ஆகிய துறைகளினால் நடத்தப்படும் பள்ளிகளில் தமிழை ஒரு பாடமாகக் கொண்டு பயின்று, 2014–2015ஆம் கல்வியாண்டில் 12ஆம் வகுப்புப் அரசு பொதுத்தேர்வில் மாநில அளவில் முதல் இடத்தைப் பெற்ற 21 மாணவ–மாணவியர்களுக்கு 10 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை 29.06.2015 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, மாணவ–மாணவிகள் அனைவரும், நாடே போற்றும் வகையில் மிக உயரிய இடத்தை அடைந்து, வெற்றி பெற வேண்டும் என வாழ்த்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர், தமிழ்நாடு அரசு ஆலோசகர், பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். ■

சாதனைப் படைத்த பெண்கள்

மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம், 2014ஆம் ஆண்டுக்கான ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ்., உள்ளிட்ட பல்வேறு குடிமைப் பணிகளுக்கான தேர்வுகளை கடந்த ஆண்டு ஆகஸ்ட் 24ம் தேதி நடத்தியது. 4.5 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் இத்தேர்வை எழுதினர், பின்னர் நடைபெற்ற முதன்மைத் தேர்வினை 16,933 பேர்கள் எழுதினர். இறுதியாக கடந்த மே மாதம் நடைபெற்ற நேர்முகத் தேர்வுக்கு 3,308 பேர் அழைக்கப்பட்டனர்.

இந்த நேர்முகத் தேர்வின் முடிவுகள் 04.07.2015 அன்று வெளியிடப்பட்டன. இந்தத் தேர்வில் 1,236 பேர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ்., உள்ளிட்ட மத்திய அரசுப் பணிகளுக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில் டெல்லியைச் சேர்ந்த மாற்றுத் திறன் படைத்த பெண்ணான இரா சிங்கால் முதலிடம் பெற்றுள்ளார். முதல் 4 இடங்களையும் பெண்களே வென்றுள்ளனர் என்பதுடன் தமிழகத்தைச் சேர்ந்த சாருஸ்ரீ என்பவர் அகில இந்திய அளவில் 6வது இடத்தைப் பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தைச் சேர்ந்த 118 பேர்கள் இத்தேர்வில் வெற்றிப் பெற்றுள்ளனர் என்பது நமக்குப் பெருமையளிக்கும் செய்தியாகும். ■

ஏழை மகளிரைக் குடும்பத் தலைவராகக் கொண்ட மகளிருக்கு புதிய வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் தொழிற்பயிற்சிகள் தொடக்க விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஏழை மகளிரைக் குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான சிறப்பு வாழ்வாதார திட்டத்தினை அறிவித்துள்ளார்கள். இத்திட்டமானது ஊரகப் பகுதிகளில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வு திட்டம் ஆகியவற்றின் வாயிலாக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி தமிழ்நாட்டின் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் 18 – 45 வயது வரை உள்ள மகளிர் குடும்பத் தலைவர்களாக உள்ளவர்களுக்கு அல்லது 18–35 வயது வரை உள்ள அவர்களுடைய ஆண் அல்லது பெண் வாரிசுகளுக்கு சுய வேலைவாய்ப்பிற்கான பயிற்சிகள் மற்றும் வேலை வாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

தருமபுரி மாவட்டம்

மகளிர் குடும்பத் தலைவிகளுக்கான சிறப்புத் திட்டத்தின்படி தருமபுரி மாவட்டத்தில் 60 மகளிருக்கு தையல் மற்றும் ஆயத்த ஆடை தயாரிப்பு பயிற்சி, 30 மகளிருக்கு நடத்துநர் பயிற்சி, 20 நபர்களுக்கு செவிலியர் பயிற்சி மற்றும் 30 நபர்களுக்கு அழகுக்கலை பயிற்சி என 140 மகளிர் தொழிற்பயிற்சிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 01.07.2015 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் திரு. கே. விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் மேற்படி பயிற்சிகளை துவக்கி வைத்து, 50 ஏழை மகளிர் குடும்பத் தலைவர்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டிற்காக தலா ரூ. 10,000/– வீதம் ஐந்து இலட்சம் ரூபாயினை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் திருமதி. தேன்மொழி, மாவட்ட ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர் திருமதி. ரேவதி, கால்நடைத்துறை துணை இயக்குநர் மருத்துவர் சீனிவாசன், உதவி இயக்குநர் மருத்துவர் இளங்கோவன், புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. சீனு. நாராயணன் மற்றும் புதுவாழ்வுத் திட்டப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் மகளிர் குடும்பத் தலைவிகளுக்கான சிறப்புத் திட்டத்தின்படி ஏழை குடும்பங்களைச் சேர்ந்த 120 மகளிருக்கு முதற்கட்டமாக ஆயத்த ஆடை தயாரிப்பு மற்றும் அழகுக்கலை பயிற்சி வழங்கப்பட உள்ளது.

இந்தப் பயிற்சிகளின் தொடக்க விழா 01.07.2015 அன்று கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் திரு. டி.பி. ரமேஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று பயிற்சிகளை தொடக்கி வைத்து பயிற்சிகளின் பயன் குறித்தும், சிறப்புத் திட்டம் குறித்தும் விளக்க உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. க. மூர்த்தி, மாவட்ட ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர் திரு. ஜி. இராமையா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. பி. மந்திராசலம் மற்றும் புதுவாழ்வு திட்ட உதவித் திட்ட மேலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சேலம் மாவட்டம்

சேலம் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் செயல்படும் ஆறு ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 80 பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயனாளிகளின் விருப்பத்தின்படி 55 பயனாளிகளுக்கு செவிலியர் பயிற்சியும், 25 பயனாளிகளுக்கு அழகுக் கலை பயிற்சியும் புதுவாழ்வு திட்டத்தின் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுளளது

மேற்படி பயிற்சிகளை 01.07.2015 அன்று மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. தரணி அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் பயிற்சி நிறுவனங்களின் பொறுப்பாளர்கள், உதவித் திட்ட மேலாளர் திரு. கலைச்செல்வன் மற்றும் புதுவாழ்வுத் திட்டப் பணியாளர்கள், பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர். ■

உங்களுக்குத் தெரியுமா?

உங்களால் ஒரு உயிரைக் காப்பாற்ற முடியும் உயிர்க்காக்கும் அடிப்படை முதலுதவி பயிற்சியினை தெரிந்து கொள்ள தயாராய் இருங்கள்.

விரைவில்...

அனைத்துத் தரப்பினரும் பயன் பெறும் வகையிலான காப்பீடு மற்றும் ஓய்வூதியத் திட்டங்கள்

அனைத்துத் தரப்பு மக்களுக்கு பயன் பெறும் வகையில் மத்திய அரசு பிரதான் மந்திரி ஜீவன்ஜோதி பீமாயோஜனா மற்றும் பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா என்னும் இரண்டு காப்பீட்டு திட்டங்களையும் மற்றும் அடல் பென்சன் யோஜனா என்ற ஓய்வூதியத் திட்டம் ஒன்றினையும் அறிவித்துள்ளது.

பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா

இந்தக் காப்பீட்டு திட்டம் ஒரு விபத்துக் காப்பீட்டுத் திட்டமாகும். இத்திட்டம் விபத்து போன்ற காரணங்களினால் நிகழும் துரதிருஷ்ட மற்றும் அகால மரணத்தின் போது குடும்ப பாதுகாப்பிற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஓராண்டு இடைவெளியில் புதுப்பிக்கத்தக்க வகையிலான இந்தக் காப்பீடு திட்டம் ரூபாய் இரண்டு இலட்சம் மதிப்புடையதாகும். வங்கியில் சேமிப்புக் கணக்கு வைத்துள்ள 18 முதல் 70 வயது வரையுள்ள அனைவரும் வருடத்திற்கு 12 ரூபாய் மட்டுமே பிரிமியமாக செலுத்தி இக்காப்பீட்டுத் திட்டத்தில் இணையலாம். ஆண்டுதோறும் ரூ. 12 பிரிமியம் செலுத்தி வந்தால், ரூபாய் 2 இலட்சம் விபத்துக் காப்பீடு பெறலாம். விபத்தினால் ஏற்படும் நிரந்தர உடல் செயல் இழப்பும் இத்திட்டத்தில் அடங்கும்

பிரதான் மந்திரி ஜீவன்ஜோதி பீமா யோஜனா

இந்தக் காப்பீட்டு திட்டம் ரூபாய் இரண்டு இலட்சம் மதிப்புடையதாகும். வங்கியில் சேமிப்புக் கணக்கு வைத்துள்ள 18 முதல் 50 வயது வரையுள்ள அனைவரும் வருடத்திற்கு ரூ. 330/- மட்டும் பிரிமியம் செலுத்தி இக்காப்பீட்டுத் திட்டத்தில் இணையலாம். இந்தப் பிரிமியம் செலுத்துவோருக்கு மரணத்துக்குப் பின் அவரின் குடும்பத்தினருக்கு ரூபாய் 2 இலட்சம் காப்பீடு தொகை கிடைக்கும். இவற்றுக்கான பிரிமியத் தொகை வங்கிக் கணக்கில் இருந்து பிடித்தம் செய்யப்படும்.

அடல் பென்ஷன் யோஜனா

18 முதல் 40 வயது வரை உள்ள அமைப்புசாரா தொழிலாளர்கள் உட்பட வங்கிக் கணக்கு வைத்திருக்கும் அனைவரும் அடல் பென்சன் யோஜனா திட்டத்தில் சேரலாம். 18 வயதுடைய ஒருவர் இத்திட்டத்தில் இணைந்து மாதந்தோறும் ரூ. 42/- முதல் ரூ. 210/- வரை பிரிமியம் கட்டி வந்தால் அவருடைய 60 வயதில் மாதந்தோறும் ரூ. 1000/- முதல் ரூ. 5000/- வரை ஓய்வூதியம் கிடைக்கும். ஓய்வூதியதாரரின் மரணத்திற்குப் பின்னர் அவரின் மனைவிக்கும், மனைவியின் மரணத்திற்குப் பின்னர் வாரிசுக்கும் குறிப்பிட்ட தொகை கிடைக்கும்.

இத்திட்டங்கள் குறித்து மேலும் விபரங்களை அறிந்து கொள்ள வங்கி அல்லது பேங்க் மித்ராவைத் தொடர்பு கொள்ளுங்கள். ■

(சென்ற இதழ் தொடர்ச்சி)

சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள்

கே. எம். திருநாவுக்கரசு,
முதுநிலை ஆலோசகர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
சென்னை.

சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களின் பணிகள்

ஊரகப் பகுதிகளில் செயல்படும் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் தனி நபர்களுக்கு வங்கி தொடர்பான சேவைகள் எளிதில் கிடைத்திட சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களாக ஊரகப் பகுதியில் உள்ள தகுதி வாய்ந்த மற்றும் ஆர்வமுள்ள மகளிர் தேர்வு செய்யப்படுகின்றனர். இவர்கள் நிதி உள்ளாக்கம் (அனைவருக்கும் நிதிச் சேவை மற்றும் நிதிசார் கல்வி), கடன் இணைப்பு, கடன் பயன்பாடு, கடன் திரும்பச் செலுத்துதல் மற்றும் கண்காணித்தல், காப்பீடு ஆகிய நான்கு விதமான பணிகளை மேற்கொள்வார்கள்.

சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் (காப்பீடு)

1. அனைத்து ஊரக ஏழை மக்களையும் 100% காப்பீட்டில் இணையச் செய்தல்
2. அனைவருடைய சொத்துக்களும் (Assets) 100% காப்பீடு செய்ய வழிகாட்டுதல்
3. காப்பீடு தொடர்பான பதிவேடுகளையும், கோப்புகளையும் தொடர் பராமரித்தல்
4. பயனாளிகளுக்கு உரிய நேரத்தில் காப்பீட்டின் இழப்பீட்டு பயன் கிடைக்க உதவி செய்தல்
5. குழு வாரியாக காப்பீடு பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
6. காப்பீடு தொடர்பான செயல்பாடுகளை முறைப்படி ஆவணப்படுத்துதல்

சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களின் பொதுவான பணிகள் மற்றும் பொறுப்புகள்

1. வங்கிகள் மற்றும் அதன் சேவைகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
2. குழுக்களுக்கு வங்கிகளில் சேமிப்புக் கணக்கு தொடங்க வழிகாட்டுதல்
3. நுண்கடன் திட்டம் தயாரிக்க உதவுதல்
4. பொருளாதார நடவடிக்கைகளுக்கான திட்ட அறிக்கைகளை எளிய முறையில் தயாரிக்க உதவுதல் – வழிகாட்டுதல்
5. வங்கிக் கடன் திரும்ப செலுத்துதலை தொடர்ந்து கண்காணித்தல்
6. அரசு மானியம் / மானியம் சாரா வருமானத்தை பெருக்கும் தொழில் பற்றி தெரிந்து வழிகாட்டுதல்
7. வட்டி வீதம் பற்றிய கணக்கியல் முறைகளை அறிந்து வைத்திருத்தல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
8. தவணை தவறிய கடன்களால் ஏற்படும் விளைவுகளை குழுக்களுக்கு தெரியப்படுத்துதல்
9. பொதுக் காப்பீடு, தொழில், சொத்து அனைத்திற்கும் காப்பீடு செய்தலை உறுதிபடுத்துதல்
10. கடன் விநியோகம் உறுப்பினர்களுக்கு முறையாக சென்றடைவதை உறுதி செய்தல்
11. குறுஞ்செய்திகள் (SMS) மூலம் வங்கிவாரியாக பெற்ற கடன் / திரும்ப செலுத்துதல் பற்றிய விவரம் பெறுதல்
12. சுய உதவிக் குழுக்கள், கூட்டமைப்பு தொழில் குழுக்கள் போன்ற சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு வங்கி தொடர்பான ஆவணங்கள் தயாரிக்க வழிகாட்டுதல்
13. வட்டார அளவில் நடைபெறும் வங்கியாளர் கூட்டங்களில் கலந்து கொண்டு, குழுக்கள் சந்திக்கும் பிரச்சினைகளை எடுத்துக் கூறி, வங்கிகளின் ஆலோசனைகளை பெறுதல்
14. பிரச்சினைகளுக்கு சுமூகமான முறையில் தீர்வு காணுதல்
15. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க மேலாண்மை அலகுகள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு இணைப்புப் பாலமாக செயல்படுதல்
16. ஒவ்வொரு மாதமும் தர மதிப்பீடு முகாம் நடத்தி, சுய உதவிக் குழுக்களை மதிப்பீடு செய்ய திட்டமிடல்
17. இயக்கம் வழிக்காட்டுதலின் (கையேட்டின்படி) இயக்க நோக்கம் மற்றும் குறிக்கோள்களின் அடிப்படையில் செயல்படுவதை உறுதி செய்தல்
18. ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுதல். அதற்கான வாராந்திர கூட்டங்களை அணித்தலைவர் அல்லது களப்பணியாளர்களின் உதவியுடன் நடத்துதல். ■

(தொடரும்)



வாழ்வாதாரத்தை

வளம் பெறச் செய்த மீன் வலைகள்

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியத்தில் தேரேகால்புதூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு செயல்பட்டு வருகிறது. இக்கூட்டமைப்பில் நாஞ்சில் நகர் தெற்கு, சடையன்குளம் மற்றும் கோதை கிராமம் ஆகிய மூன்று குக்கிராம அளவிலான மன்றங்களும், 45 சுய உதவிக் குழுக்களும் உறுப்பினர்களாக இணைந்துள்ளன.

மகளிர் திட்டத்தின் மூலம் இக்கூட்டமைப்பின் நிர்வாகிகளுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இக்கூட்டமைப்பிற்கு வழங்கப்பட்ட ஊக்க நிதி ஒரு இலட்சம் ரூபாயினை, இக்கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு உள் கடனாக வழங்கப்பட்டு, அதில் கிடைத்த இலாபத் தொகையில் கூட்டமைப்பு அலுவலகத்திற்குத் தேவையான பொருட்கள் வாங்கப்பட்டது. மேலும் கூட்டமைப்பு ஊக்க நிதியில் இருந்து இரண்டு தையல் இயந்திரங்கள் வாங்கப்பட்டன. இக்கூட்டமைப்பின் சிறப்பான செயல்பாட்டினைக் கண்ட மகளிர் திட்ட அலுவலர் அவர்கள் மேலும் இரண்டு தையல் இயந்திரங்களை வழங்கியுள்ளார். தையல் தொழில் தெரிந்த உறுப்பினர்கள் கூட்டமைப்பின் வளாகத்தில் உள்ள நான்கு தையல் இயந்திரங்கள் மூலம் தையல் தொழில் மேற்கொண்டு வருவாய் பெற்று வருகின்றனர்.

இக்கூட்டமைப்பிற்கு பெருங்கடனாக வழங்கப்பட்ட 25 இலட்சம் ரூபாயினை, 25 சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூ. 1 இலட்சம் வீதம் உள்கடனாக வழங்கப்பட்டுள்ளது. பின்னர் 27.10.2011 அன்று இக்கூட்டமைப்பிற்கு மீண்டும் ரூ. 50 இலட்சம் ரூபாய் பெருங்கடனாக வழங்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்ட அளவில் பெரிய தொழிலாக உள்ள மீன்பிடித் தொழிலுக்கு முக்கிய உபகரணமாக உள்ள மீன்பிடி வலைகள் தயாரிக்கும் தொழிலை கூட்டமைப்பின் சார்பில் மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டமைப்பில் உறுப்பினர்களாக உள்ள சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்களுக்கு மீன்பிடி வலைகள் தயாரிக்கும் தொழிலுக்கு தேவையான பயிற்சிகள் உரிய பயிற்றுனர்கள் மூலம் வழங்கப்பட்டது. பயிற்சியில் அனைவரும் ஊக்கத்துடன் கலந்து கொண்டு, சிறப்பான முறையில் பயிற்சியினை நிறைவு செய்தனர்.

> இக்கூட்டமைப்பிற்கு பெருங்கடனாக வழங்கப்பட்ட 25 இலட்சம் ரூபாயினை, 25 சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூ. 1 இலட்சம் வீதம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

பின்னர் மீன் வலை தயாரிப்பதற்கு தேவையான இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, அதன் மூலம் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மீன்வலை தயாரிப்பில் ஈடுபடத் துவங்கினர். இன்று தேரேகால்புதூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மீன்வலை தயாரிப்பில் சிறந்து விளங்குகின்றனர். அனைத்து செலவினங்களும் போக மாதம் ஒன்றுக்கு ரூ. 30,000/- வரை கூடமைப்பிற்கு வருமானம் கிடைக்கிறது.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் 30.06.2015 அன்று தேரேகால்புதூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு வருகைதந்து, கூட்டமைப்பின் செயல்பாடுகளைப் பார்வையிட்டு, கூடுதலாக ஒரு மீன் வலை பின்னும் இயந்திரம் வாங்கவும், தையல் தொழிலுடன் ஜமிக்கி மற்றும் ஜர்தோசி வேலைபாடுகள் மூலம் வருவாய் ஈட்டவும் ஆலோசனைகளை வழங்கியதுடன், மேலும் சிறப்பாக செயல்பட வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

தங்களுக்கு இந்த வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த மகளிர் திட்டத்திற்கு தேரேகால் புதூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றனர். ■

நன்மைகள் பல தரும் கொத்தமல்லி

நாம் அன்றாட சமையலில் வாசனைக்காக பயன்படுத்தும் கொத்தமல்லி பல்வேறு மருத்துவ குணங்களைக் கொண்டுள்ளது. கொத்தமல்லித் தழையை தனியாகவே துவையல், சட்னி போன்று செய்து சாப்பிட்டாலே அதிக அளவு பலன்கள் கிடைக்கும்.

குழந்தைகளுக்கு அடிக்கடி கொத்துமல்லி துவையல் செய்து சாப்பிடக் கொடுத்தால் பார்வைக் குறைபாடுகள் ஏற்படாது. கொத்தமல்லித் தழையுடன் தேங்காய் சேர்த்து துவையலாக செய்து சாப்பிட்டால் வாய்ப்புண், வயிற்றுப் புண், வயிற்று வலி போன்றவை குணமாகும்.

நம் உடலில் ஓடும் இரத்தத்தை சுத்திகரிப்பதில் கொத்துமல்லித் தழை பெரிதும் துணை புரிகிறது. நெய்யில் வதக்கிய கொத்துமல்லித் தழையை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், உடல் வலிவும் பொலிவும் அடையும்.

மாலைக்கண் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தினமும் கொத்தமல்லித் தழையை உணவுடன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் நாளடையில் மாலைக்கண் நோய் சரியாகும்.

மலச்சிக்கல், உடம்பு வலி போன்றவற்றால் அவதிப்படுபவர்கள் கொத்தமல்லித் தழையுடன் வெற்றிலை சேர்த்து அரைத்து, நெல்லிக்காய் அளவு சாப்பிட்டால் பிரச்சனை தீரும்.

கொத்துமல்லித் தழையைப் போலவே கொத்துமல்லியும் (தனியா) பல்வேறு மருத்துவ குணங்களைக் கொண்டுள்ளது. எனவே சிறியவர் முதல் பெரியவர் வரை அனைத்துத் தரப்பினரும் கொத்துமல்லி மற்றும் கொத்துமல்லித் தழை ஆகியவற்றை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்வது அவர்களின் உடல் நலத்திற்கு மிகுந்த பயனைத் தரும். இயற்கை நமக்குத் தந்துள்ள பொருட்களில் கொத்துமல்லி ஏராளமான நன்மைகளைக் கொண்டுள்ளது. ■

நெய்யில் வதக்கிய கொத்துமல்லித் தழையை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், உடல் வலிவும் பொலிவும் அடையும்.

கலப்படத்தைக் கண்டுபிடிப்பது எப்படி?

இன்று நாம் பயன்படுத்தும் பொருட்கள் அனைத்தும் தரமானது என்று உறுதியாக சொல்ல முடியாது. குறிப்பாக சமையலுக்குப் பயன்படுத்தும் பொருட்களிலும் கலப்படம் நிறைந்துள்ளது. எனவே நாம் பயன்படுத்தும் சில உணவுப் பொருட்களில் கலந்துள்ள பொருட்களையும், அதில் கலப்படத்தை எவ்வாறு கண்டுபிடிப்பது என்பதையும் பார்ப்போம்.

மிளகு

இதில் அதிக எடைக்காக பப்பாளி விதைகள் கலக்கப்படுகிறது. பழைய மிளகை புதியது போன்று காட்ட மினரல் ஆயில் சேர்க்கப்படுகிறது. சிறிது மிளகை ஒரு டிஷ்யூ பேப்பரில் வைத்தால் அதில் மிளகில் கலந்துள்ள எண்ணெய் ஒட்டும். தண்ணீரில் மிளகைப் போட்டால் எண்ணெய் மிதக்கும்.

தனியா (கொத்துமல்லி)

இதில் பளபளப்புக்காக சல்பர்டை ஆக்ஸைடு என்ற இரசாயனப் பொருள் பயன்படுத்தப்படுகிறது. கொத்தமல்லி கருப்பாக இருப்பது தரமானதாகும். கொத்தமல்லி வெண்மையாக இருந்தால் அது கலப்பட கொத்தமல்லி.

ஜவ்வரிசி

டினோபால் என்ற திரவத்தை ஜவ்வரிசியுடன் கலப்பதால் ஜவ்வரிசி வெண்மையாக இருக்கும். இதை சோதனைச் சாலைகளில் கண்டறியலாம்.

பருப்பு

பெரும்பாலான பருப்பு வகைகளில் மஞ்சள் நிற இரசாயனம் சேர்க்கப்படுகிறது. இதனால் நிறம் மங்கிய பழைய பருப்புகள் புதியது போல தோற்றமளிக்கின்றன. சோதனைச்சாலைகளில் பருப்புகளின் கலப்படத்தை கண்டுபிடிக்கலாம்.

டீ பவுடர்

டீக் கடைகளில் டீ போட பயன்படுத்திய பின்பு மீதமாகும் கசடுகளை கிலோ கணக்கில் சேகரித்து அதில் சிறிதளவு நல்ல டீத் தூள் மற்றும் சில இராசயனப் பொருட்களை சேர்த்து மீண்டும் விற்பனை செய்யப்படுகிறது.

சிறிது டீத்தூளினை வெள்ளை நிறப் பேப்பரில் வைத்து குளிர்ந்த தண்ணீர் சிறிது விட்டால் பேப்பரின் நிறம் மாறினால் கலப்படத் டீத்தூள் என்பதை அறியலாம். தரமான டீத்தூளில் சுடுநீர் விட்டால் பேப்பரின் நிறம் மாறும்.

மைதா மாவு

மைதா மாவில் மரவள்ளிக் கிழங்குத் தூள் அதிக அளவில் கலக்கப்படுவதால் மைதா மாவு வெளிர் நிறமாக இருக்கும். பொதுவாக தரமான மைதா மாவு இழுவை தன்மை கொண்டதாக இருக்கும். இதுவே கலப்பட மைதாவாக இருந்தால் இழுவை தன்மை இருக்காது.

கலப்படம் செய்யப்படும் பொருட்களில் மிகவும் சில பொருட்கள் மட்டுமே இங்கு இடம் பெற்றுள்ளன.

ஆனால் பெரும்பாலான பொருட்கள் கலப்படத்திற்கு ஆளானவையே. எனவே பொருட்களை வாங்கும் போது கவனமாக சோதித்துப் பார்த்து வாங்க வேண்டும். ■

சுவை நிறைந்த சிம்லி உருண்டை

தேவையான பொருட்கள்

கேழ்வரகு மாவு – 100 கிராம், தேங்காய் துருவல் – அரை மூடி, வெல்லம் – 150 கிராம், கருப்பு எள் – 50 கிராம், வேர்க்கடலை – 50 கிராம், ஏலக்காய் – 4

செய்முறை

ஒரு வாணலியில் கருப்பு எள் மற்றும் வேர்க்கடலையை போட்டு சிறிது நேரம் வறுத்து எடுக்கவும். பிறகு கேழ்வரகு மாவை வாணலியில் போட்டு மெல்லிய தீயில் வறுத்து எடுத்து, அத்துடன் வெல்லத்தை தூள் செய்து போட்டு, தேங்காய் துருவல் மற்றும் ஏலக்காயை தட்டி போட்டு சப்பாத்தி மாவு பதத்துக்கு பிசைந்து கொள்ளவும். பின்னர் அடுப்பைப் பற்ற வைத்து, அதில் தோசைக்கல்லை போட்டு இந்த மாவை சிறு சிறு உருண்டைகளாக உருட்டி, தோசைக்கல்லில் போட்டு அடைபோல தட்டி சுட்டு எடுக்கவும்.

பின்னர் ஆறிய அடையை உரலில் போட்டு இடித்தோ அல்லது மிக்ஸியில் போட்டு நைசாக அரைக்கவும். இத்துடன் வறுத்து வைத்துள்ள வேர்க்கடலை மற்றும் எள் போன்றவற்றையும் சேர்த்து, இனிப்பு சுவை வேண்டும் என்றால் சிறிது வெல்லமும் சேர்த்து அரைத்து பின்னர் சிறு சிறு உருண்டைகளாகப் பிடிக்கவும்.

சாப்பிட சுவையாக இருக்கும் இந்த சிம்லி உருண்டை உடல் நலத்திற்கு மிகவும் ஏற்றது. ■

திருமதி. சசிகலா ராஜமன்னார்,
மேற்கு, மாம்பலம் சென்னை.

நலம்... நலமறிய...

புதினா, இஞ்சி, எலுமிச்சம் பழத் துண்டு ஆகியவைகளை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து, அந்தத் தண்ணீரை வடிகட்டி குடித்து வந்தால் உடல் பருமன் குறையும்.

இஞ்சியை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி, தேனில் 10 நாட்கள் ஊற வைக்கவும். தினமும் காலையில் ஒரு துண்டு சாப்பிட்டு வந்தால், வாதம், பித்தம், சோர்வு, செரிமானக் கோளாறுகள் ஆகியவை குணமாகும். இரத்த ஓட்டமும் சீராகும்.

வெந்தயம் அல்லது வெந்தயக் கீரையை விழுதாக அரைத்து, முகப்பருவின் மீது தடவி வந்ததால், பருவினால் ஏற்படும் வலி நீங்குவதோடு பருவும் மறையும்.

தேநீர், பால், சர்பத் ஆகியவற்றில் சர்க்கரைக்குப் பதிலாகத் தேனை கலந்து சாப்பிட்டு வந்தால் தோல் பளபளப்பாகும். உடலும் வனப்புடன் இருக்கும்.

தேங்காய் எண்ணெயில் மஞ்சள் தூளைப் போட்டு குழைத்து, உடலில் தடவி, சிறிது நேரத்திற்கு பின் மீதமான சுடுநீரில் குளித்து வந்தால், தோல் பொன்னிறமாகவும், மென்மையாகவும், பட்டுப் போலவும் மாறும். ■

ரோஜா இதழ்

அழகு

சருமத்தின் அழகினை பாதுகாக்க இயற்கை மூலிகைகளை விட்டு விட்டு இரசாயனப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படுபவைகளைப் பயன்படுத்தி வருகிறோம். இதனால் நமது சருமம் பாதிப்பிற்குள்ளாகிவிடும். எனவே இயற்கைப் பொருட்களைக் கொண்டு மூலிகைப் பொடி செய்து பயன்படுத்தி பொலிவான தோற்றம் பெறலாம்.

மூலிகைப் பொடி தயாரிக்க தேவையானப் பொருட்கள்

பச்சைப் பயிறு – 250 கிராம், கடலை பருப்பு – 250 கிராம், கஸ்தூரி மஞ்சள் – 100 கிராம், பூலாங்கிழங்கு – 250 கிராம், ஆவாரம் பூ அல்லது ரோஜா இதழ் – 250 கிராம்

செய்யும் முறை

ஆவாரம் பூ அல்லது ரோஜா இதழை சுத்தப்படுத்தி காய வைக்கவும். நன்கு காய்ந்ததும் இதனுடன் மற்றப் பொருட்களை சேர்த்து சீயக்காய் அரைக்கும் இயந்திரத்தில் போட்டு அரைத்து, ஒரு டப்பாவில் போட்டு வைத்துக் கொள்ளவும். தினசரி காலை, மதியம், மாலை, இரவு ஆகிய நேரங்களில் இந்தப் பொடியை சிறிதளவு முகத்தில் தேய்த்து உடனே கழுவி விடவும். நாளடைவில் முகம் பொலிவடையும்.

அற்புதத்தின் கதை
நான் சொல்றத கொஞ்சம் கேளுங்க...
அதெல்லாம் நமக்கு சரிப்படாது. சும்மா இரு புள்ள, வேலைக்குக் கிளம்பனும்
அற்புதத்தின் கணவன் பாண்டி, தூரத்துக் காட்டில் கூலி வேலைக்குச் செல்பவன்.
அதிகாலையிலே எழுந்து போகிற வழியில் தன் காலைக் கடன்களை முடித்து கொள்வான் பாண்டி.
மாலையில் வரும் போது கூலியில் ஒரு பகுதியைக் குடித்துவிட்டு வருவான்.
ஒருநாள் மாலை..
என்ன.. வீடு அடைச்சிருக்கு? அற்புதம்.. அற்புதம்!
அவளுக்கு உடம்பு சரியில்லேப்பா...
என் மகதான் ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டுப் போயிருக்கா..
எ..என்னாச்சு?
வந்தாத்தான் தெரியும்...

பதற்றத்துடன் பாண்டியும் மருத்துவமனைக்குக் கிளம்ப...
இதோ வந்துட்டாங்க.
அண்ணே... பாவம் அக்கா. டாக்டர் திட்டினாரு தெரியுமா?
என்னாச்சு அற்புதம்?
அக்காவுக்கு ஆசனவாய் புற்றுநோயாம்!
மலத்தை அடக்குறதால வர்றதாம்!
ஆரம்ப நிலைங்கிறதனால குணப்படுத்திடலாம்னு சொல்லிட்டாங்க. முதல்ல வீட்டுக்கு ஒரு கழிப்பறை கட்டுங்க!
ஐயோ... எல்லாம் என்னாலதான். அவ சொன்னத நான் கேட்டிருந்தா இப்ப இந்த நிலைமை வந்திருக்காது
கதறினான் பாண்டி
இனி நான் குடிக்கிறதக் குறைச்சிட்டு உடனே கழிப்பறை கட்ட ஏற்பாடு பண்றேன்.
விரைவில் அதைச் செய்து காட்டினான் பாண்டி
அற்புதத்தின் கதை ஊரெங்கும் பரவியது. கூடவே விழிப்புணர்வும்.
நல்வரவு
தூய்மையான கிராமம்

கன்னியாகுமரி

சிறப்புத் திட்டம் குறித்து கலந்தாய்வு

கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறப்பு வாழ்வாதாரத் திட்டம் தொடர்பான விளக்கக் கூட்டம் 29.06.2015 அன்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் நாஞ்சில் கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சியர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் இந்த கூட்டத்திற்கு தலைமை வகித்து, சிறப்பு வாழ்வாதாரத் திட்டத்தின் நோக்கம், இத்திட்டத்தினை செயல்படுத்தும் படிநிலைகள் போன்றவை குறித்து விரிவாக எடுத்துரைத்தார். இக்கூட்டத்தில் கன்னியாகுமரி மாவட்ட ஊரக வாழ்வாதாரத் திட்ட இயக்குநர் டாக்டர் எஸ். சுரேஷ், அனைத்து நகராட்சிகளின் ஆணையர்கள், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), அனைத்து பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

தேனி

பெருங்கடன் – ஆதார நிதி

தேனி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், சீம்பாலக்கோட்டை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு, மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, சின்னமனூர் கிளை மூலம் பெருங்கடனாக ரூ. 13.50 இலட்சத்திற்கான காசோலையினை 22.06.2015 அன்றும், பெரியகுளம் மற்றும் உத்தமபாளையம் வட்டாரங்களில் கிராம வறுமை வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மூலம் துவக்கப்பட்டுள்ள 115 சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதியாக ரூ. 9.85 இலட்சம் தொகைக்கான காசோலைகளை 23.06.2015 அன்றும் தேனி மாவட்ட ஆட்சியர் திரு. ந. வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சிகளில் தேனி மாவட்ட வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திருமதி. ஜா. உஷாதேவி, மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கள மேலாளர் திரு. ஆர். சுகுமார், சின்னமனூர் கிளை மேலாளர் திரு. எஸ். சேகர் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார திட்ட மேலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

கடலூர்

முதியோர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண வழிகாட்டுதல் பயிற்சி

முதியோர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் குறித்தும், அவைகளுக்குத் தீர்வு காண, சமூக அமைப்புகளை உருவாக்கி வழிகாட்டவும், அனைத்து மாவட்ட NRLP திட்ட அலுவலர்கள் மற்றும் சமூகப் பணியாளர்களுக்கு, வழிகாட்டும் பயிற்சி கடலூர் மாவட்டம், தாமரைக்குளம் கிராமத்தில் அமைந்துள்ள ஹெல்ப் ஏஜ் இந்தியா தொண்டு நிறுவனத்தின் சார்பில் நடைபெற்றது.

இரண்டு நாட்கள் வீதம் மூன்று பிரிவுகளாக நடைபெற்ற இப்பயிற்சியில், சமூக மாற்றுத் திறனாளி வழிநடத்துனர், சிறப்புக் குழு வழிநடத்துனர், வட்டார திட்ட அலுவலர், உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். ஹெல்ப் ஏஜ் இந்தியா தொண்டு நிறுவனம் மற்றும் முதியோர்களுக்கான முதியோர் அமைப்பின் பயிற்றுனர்கள் பயிற்சி அளித்தனர்.

இந்தப் பயிற்சியில் கலந்து கொண்ட பயிற்சியாளர்கள், ஹெல்ப் ஏஜ் இந்தியா தொண்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலின் கீழ் கடலூர் மாவட்டம், தம்மண்ணன்பட்டு மற்றும் சிங்காரத்தோப்பு ஆகிய கிராமங்களில் செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்கள் மற்றும் அப்பகுதிகளில் உள்ள முதியவர்களை நேரிடையாக சந்தித்து அவர்களின் அனுபவங்களையும், அவர்கள் சந்திக்கும் பிரச்சனைகள் குறித்தும் கேட்டறிந்தனர். மேலும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் முதியோர்களுக்கான சுய உதவிக் குழுக்கள் உருவாக்குதல் குறித்த வழிமுறைகளும் ஆலோசிக்கப்பட்டது. ■

முதியவர்களை நேரிடையாக சந்தித்து அவர்களின் அனுபவங்களையும், அவர்கள் சந்திக்கும் பிரச்சனைகள் குறித்தும் கேட்டறிந்தனர்.

திருச்சிராப்பள்ளி

கூட்டமைப்புகளுக்கு ஊக்க நிதி

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படும் ஊராட்சி ஒன்றியங்களில் 404 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் அமைக்கப்பட்டு, அவைகளின் மூலம் சுய உதவிக் குழுக்களுக்கு ஆதாரநிதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 238 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டு, அவைகளுக்கு ஊக்க நிதியும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு வழங்குவதில் சிறப்பாக செயல்பட்ட வங்கிகளுக்கு விருதுகளும் வழங்கப்படுகின்றன. 147 ஒத்த தொழில் குழுக்கள் அமைக்கப்பட்டு, 50 ஒத்த தொழில் குழுக்களுக்கு ஊக்கத் தொகை வழக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக சமீபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 45 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு சமுதாய முதலீட்டு நிதியாக ரூ. 180 இலட்சம், 45 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ. 45 இலட்சம், 17 ஒத்த தொழில் குழுக்களுக்கு உள்கட்டமைப்பு நிதியாக ரூ. 17 இலட்சம் என மொத்தம் ரூ. 242 இலட்சம் மதிப்பீட்டிலான உதவிகள் வழங்கப்பட்டது. ■

சிவகங்கை மாவட்டம்

மதி அங்காடி திறப்பு

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி நகராட்சி பேருந்து நிலையம் எதிரில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்யும் மதி அங்காடியினை 17.06.2015 அன்று மாவட்ட ஆட்சியர் (பொ) திரு. து. இளங்கோ, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வாழ்வாதார திட்ட இணை இயக்குநர்/திட்ட இயக்குர் திருமதி. ச. சரோஜாதேவி அவர்கள் திட்ட விளக்க உரையாற்றினார். காரைக்குடி நகர்மன்றத் தலைவர் திருமதி. கற்பகம் இளங்கோ, காரைக்குடி நகராட்சி ஆணையாளர் திருமதி. பெ. விஜயலட்சுமி, காரைக்குடி வட்டாட்சியர் திரு. மாங்குடி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

காஞ்சிபும்

விற்பனை அங்காடி திறப்பு விழா

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனை அங்காடியினை 09.07.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் முனைவர் வே. ச. சண்முகம், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் மக்களவை உறுப்பினர் திருமதி. மரகதம் குமரவேல், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. வி. சோமசுந்தரம், வாலாஜாபாத் திரு. பா. கணேசன், மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு. காஞ்சி பன்னீர்செல்வம், நகர்மன்றத் தலைவர் திருமதி. மைதிலி திருநாவுக்கரசு, ஒன்றியக்குழுத் தலைவர்கள் திரு. ஜீவானந்தம், திரு. வரதராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் திருமதி. முத்து மீனாள், மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திருமதி. கிருஷ்ணம்மாள், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தின் மேலாளர் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

விழுப்புரம்

கல்வராயன் மலை கோடை விழா 2015

விழுப்புரம் மாவட்டம் கல்வராயன் மலையில் நடைபெற்ற கோடை விழாவினை மாவட்ட ஆட்சியர் திருமதி. லஷ்மி, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில், மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு. ப. மோகன், மற்றும் மாண்புமிகு நெடுஞ்சாலைகள், சிறு துறைமுகங்கள் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. எடப்பாடி பழனிச்சாமி ஆகியோர் 11.07.2015 அன்று துவக்கி வைத்தனர்.

11.07.2015 மற்றும் 12.07.2015 ஆகிய இருதினங்கள் நடைபெற்ற இக்கோடை விழாவில் மகளிர் கூட்டமைப்புகளுக்கு ஊக்கநிதி மற்றும் பல்வேறு துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

மகளிர் திட்டத்தின் சார்பில் ஆறு சுய உதவிக் குழுக்கள் ரூ. 1 இலட்சத்து 18 ஆயிரம் மதிப்பிலான உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தனர்.

மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட நலிவுற்ற குடும்பங்களுக்கான சிறப்புத் திட்ட அறிமுகப் பயிற்சி

சமூக மற்றும் பொருளாதார ரீதியில் நலிவுற்ற நிலையில் உள்ள மகளிரை குடும்பத்தலைவராகக் கொண்ட குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த சிறப்புத் திட்டம் ஒன்றினை செயல்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இத்திட்டம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வு திட்டம் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்படும். மகளிரை தலைவராகக் கொண்ட குடும்பத்தை சேர்ந்த பயனாளிகளுக்கு நிறுவனங்களில் உறுதியான வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி, சுய வேலைவாய்ப்பிற்கான திறன் வளர்ப்புப் பயிற்சியுடன் தனிநபர் அல்லது ஒத்த தொழில் செய்வோருக்கு கூட்டாக தொழில் செய்வதற்காக வட்டி மானியத்துடன் கூடிய கடன் உதவி ஆகியவை வழங்கப்படும். மேற்கண்ட சிறப்புத் திட்டம் குறித்து அறிமுகப் பயிற்சி தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம்

காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி அலுவலக கூட்ட அரங்கில் 16.06.2015 அன்று நடைபெற்ற சிறப்புத் திட்டம் குறித்த அறிமுகப் பயிற்சிக்கு மாவட்ட ஆட்சியர் முனைவர் வே. க. சண்முகம், இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார்.

இதில் மாவட்ட மகளிர் திட்ட அலுவலர், ஊரக வளர்ச்சித்துறை உதவி இயக்குநர், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், நகராட்சி ஆணையர்கள், பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், புதுவாழ்வு திட்ட உதவித் திட்ட மேலாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டார திட்ட மேலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திருநெல்வேலி மாவட்டம்

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் 15.06.2015 அன்று நடைபெற்ற மகளிருக்கான சிறப்புத் திட்டம் குறித்த விளக்கப் பயிற்சியினை திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் முனைவர் மு. கருணாகரன், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

திருநெல்வேலி மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திரு. வை. ஜெயக்குமார் அவர்கள் சிறப்புத் திட்டம் குறித்தும், அதன் செயல்பாடுகள் குறித்தும் விளக்கமாக உரையாற்றினார். இப்பயிற்சியில் மகளிர் திட்டத்தின் உதவித் திட்ட அலுவலர்கள், ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் தலைவர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட அனைத்துத் துறைகளின் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 29.06.2015 அன்று மாவட்ட ஆட்சியர் திரு. எம். ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற சிறப்பு வாழ்வாதாரத் திட்டம் குறித்த கலந்தாய்வு கூட்டத்தில் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு திட்டம் குறித்து விளக்க உரையாற்றினார்கள். திட்ட அலுவலர் திருமதி. கு. இந்துபாலா மற்றும் பல்துறை அரசு அலுவலர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஈரோடு மாவட்டம்

ஈரோடு மாவட்டத்தில் 16.06.2015 அன்று நடைபெற்ற சிறப்புத் திட்டம் குறித்த பயிற்சி மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இப்பயிற்சியில் ஈரோடு மாநகராட்சி ஆணையர், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), உதவி ஆணையர்கள் மற்றும் அனைத்து நகராட்சிகளின் செயல் அலுவலர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டார திட்ட மேலாளர்கள் கலந்து கொண்டனர். ஈரோடு மாவட்ட வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திருமதி. பெ. ரேணுகாதேவி அவர்கள் சிறப்புத் திட்டம் குறித்து விளக்க உரையாற்றினார். ■

கோவை

பத்திரிக்கையாளர்கள் கள ஆய்வு

கோவை மாவட்டம், பொள்ளாச்சி மற்றும் கிணத்துக்கடவு ஆகிய ஒன்றியங்களில் தென்னை அதிகமாகப் பயிரிடப்படுகிறது. இப்பகுதியில் உள்ள சுய உதவிக் குழுப் பெண்கள் தென்னையின் மூலம் கிடைக்கும் தென்னை நார், தேங்காய் ஆகிய மூலப்பொருட்களைப் பயன்படுத்தி தேங்காய் எண்ணெய் உற்பத்தி, தென்னை நார் கயிறு திரித்தல் மற்றும் தேங்காய் கொப்பரை நேரடி விற்பனை ஆகிய தொழில்களில் ஈடுபட்டு இலாபம் ஈட்டி வருகின்றனர்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் இவ்வாறு ஒரே தொழிலில் ஈடுபடும் 20 சுய உதவிக் குழுப் பெண்களை இணைத்து சிந்துநதி என்ற தேங்காய் நார் கயிறு திரிக்கும் ஒத்த தொழில் குழுவும், இணைந்த கைகள் என்ற தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யும் ஒத்த தொழில் குழுவும் 2012ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. மேற்படி தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருட்கள் தாராளமாகக் கிடைப்பதாலும், தரமான பொருட்களை உற்பத்தி செய்வதால் சந்தைப்படுத்துவதில் சிரமங்கள் ஏதும் இல்லை என்பதாலும் இந்த ஒத்தத் தொழில் குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் சிறப்பாக செயல்பட்டு வரும் இந்த சிந்துநதி மற்றும் இணைந்த கைகள் ஒத்தத் தொழில் குழுக்களின் செயல்பாடுகளை 12.06.2015 அன்று கோவை மாவட்ட ஆட்சியர் தலைமையில், வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் /திட்ட இயக்குநர் மற்றும் பத்திரிக்கையாளர்கள் பார்வையிட்டு கள ஆய்வு மேற்கொண்டனர். ■

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people to overcome poverty

தொழில் மேம்பாடு அடைவதற்கு வங்கியாளர்கள் உதவ வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது

விழுப்புரம் மாவட்டத்தில்

மாவட்ட அளவிலான வங்கியாளர் கூட்டம்

விழுப்புரம் மாவட்ட சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் மாவட்ட அளவிலான வங்கியாளர் கூட்டம் 11.06.2015 அன்று கூனிமேடு சமுதாய கூடத்தில் நடைபெற்றது. இதில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இந்தியன் வங்கி, நபார்டு வங்கி ஆகியவற்றின் மேலாளர்கள் மற்றும் விழுப்புரம் மாவட்ட சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் 8 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

க

11.06.2015 அன்று நடைபெற்ற மாவட்ட அளவிலான வங்கியாளர் கூட்டமானது, தொழில் செய்ய விரும்பும் குழு உறுப்பினர்களுக்கும், குறுந்தொழில் செய்வோருக்கும் ஓர் இனிய திருப்புமுனையாக அமைந்தது.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்
திரு. **விக்ரம் கபூர்**, இ.ஆ.ப., முதன்மைச் செயலர் / திட்ட இயக்குநர்
திரு. A. R. கிளாட்ஸ்டன் புஷ்பராஜ், கூடுதல் இயக்குநர்
திரு. இரா. இரவிச்சந்திரன், தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

விழுப்புரம் மாவட்ட செயலாக்கப் பகுதிக்கு உட்பட்ட 8 ஊராட்சிகளில் சுமார் 290 சுய உதவிக் குழுக்கள் உள்ளன. இதில் 195 குழுக்கள் இலக்கு குழுக்களாக உள்ளன. குறுந்தொழில் செய்வோர் மேலும் தொழில் மேம்பாடு அடைவதற்கு வங்கியாளர்கள் உதவ வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் சிறப்பாக செயல்படுகின்ற குழுக்களுக்கு கடன் வழங்க சிறப்பு ஏற்பாடு செய்யப்படும் என்று விழுப்புரம் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் மற்றும் உதவி பொது மேலாளர் ஆகியோர் தெரிவித்தனர். மேலும் குறுந்தொழில் செய்வோர் மேம்பாடு அடைய வழிவகை செய்யப்படும் என்றும் கூறினர்.

ஆலப்பாக்கத்தில் உள்ள ஸ்ரீ பச்சைவாழியம்மன் ஹாலோ பிளாக் தொழில் குழுவிற்கு ரூ. 2,90,000/– வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டு, 13.12.2012 அன்று முதல் ஹாலோ பிளாக் கற்கள் உற்பத்தித் தொடங்கப்பட்டு, இதுவரை 50,000 ஹாலோ பிளாக் கற்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. ஆனால் கற்களை ஏற்றிச் செல்ல தனிப்பட்ட முறையில் வாகனம் ஏதும் இல்லை என்று பயனாளி திருமதி. நாகலட்சுமி என்பவர் வங்கியாளர் கூட்டத்தில் கலந்து கொண்டு கோரிக்கை விடுத்தார். கூட்டத்தில் கலந்து கொண்ட வங்கியாளர்கள் டாட்டா ஏஸ் வாகனம் வாங்குவதற்கு வங்கிக் கடன் வழங்கப்படும் என்று உறுதியளித்தனர்.

மேலும் தொழில் செய்து முன்னேற விரும்பும் குழுக்களுக்கு கூனிமேடு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலம் வங்கிக் கடன் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் தொழில் செய்ய விரும்பும் குழுக்கள் ஒரு கூட்டுப் பொறுப்புக் குழுவை அமைத்து, பின்னர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியினை அணுகலாம் என்று வங்கியின் மேலாளர் தெரிவித்தார். ■

குடிநீர் இல்லாத திட்டப் பகுதிகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் கடலோர பகுதி வாழ் மக்களுக்கு பயன் விளைவிக்கும் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடலோர பகுதிவாழ் மீனவ மக்கள் நல்ல குடிநீர் இன்றி பெரும் அவதிப்படுவதைக் கண்ட முதன்மைச் செயலாளர் / திட்ட இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்களின் ஆலோசனைப்படி, திருவள்ளூர் மாவட்டம், லைட்ஹவுஸ் குப்பம் ஊராட்சிக்குட்பட்ட திருமலை நகர் பகுதியில் ரூ. 10 இலட்சம் மதிப்பீட்டில் உப்பு நீரைக் குடிநீராக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஊராட்சியில் உள்ள திருமலைநகர், செம்பாசிப்பள்ளிகுப்பம் ஆகிய பகுதிகளில் மொத்தம் உள்ள 605 குடும்பங்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறும்.

உப்பு நீரை சுத்திகரிக்கும் இந்த இயந்திரத்தை இயக்குவதற்கும், பராமரிப்பதற்கும் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 10 உறுப்பினர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்துவது குறித்தும், குடிநீர் பாதுகாப்பு இன்றி இருப்பின் வரும் நோய்கள் குறித்தும், சுத்திகரிக்கப்பட வேண்டிய அவசியம் குறித்தும், இயந்திரத்தில் வடிகட்டுதல் முறையில் செயல்படும் மூன்று நிலைகள் மற்றும் சுத்திகரித்தல் குறித்தும், இந்த உபகரணத்தை பராமரிக்கும் முறை குறித்தும் தெரிவிக்கப்பட்டது. இக்குடிநீர் உபகரணம் இப்பகுதியில் உள்ள மக்களை பல்வேறு நோய்களிலிருந்து காப்பது மட்டுமல்லாமல், மீன்பிடித் தொழிலை அடிப்படையாகக் கொண்ட மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம் எனவும் இப்பகுதி மக்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். மேலும் கடலூர் மாவட்டம், அக்கரை, ஜெயங்கொண்டபட்டினம் ஆகிய பகுதிகளிலும் இதுபோன்ற பணி நடைபெற்று வருகிறது. ■

இயந்திர பராமரிப்பு செலவுக்காக ஒரு குடம் குடிநீர் ரூ. 5/-க்கு வழங்கலாம் எனவும், இதற்கென ஒரு தனி வங்கிக் கணக்கு பராமரிப்பது எனவும் முடிவு எடுக்கப்பட்டு, அதன்படி நாள் ஒன்றுக்கு 200 குடம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மீனவர்களுக்கு கடன் மீட்பு நிதி

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் கடலோரப் பகுதிகளில் வாழும் மீன்பிடி தொழில் செய்யும் மீனவர்களுக்கு மீன் விற்பனை சங்கங்கள் அமைத்து மீனவர்களின் வாழ்வு ஏற்றம் பெற உதவுகிறது. கந்து வட்டிக்காரர்களிடம் கடன் பெற்ற மீனவர்கள், தாம் பிடித்து வரும் மீன்களை குறைந்த விலைக்கு அவர்களிடமே விற்க வேண்டிய நிலை இருந்து வந்தது. இந்த சூழலில் இருந்து மீனவர்களை மீட்க, கடன் மீட்பு நிதி ஒதுக்கப்பட்டு சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதியின் மூலம் மீனவர்களை கடனில் இருந்து மீட்டு, அவர்கள் பிடிக்கும் மீன்களுக்கு தாமே விலை நிர்ணயம் செய்து, சரியான விலை பெற்று வருகின்றனர். இந்தக் கடன் மீட்பு நிதியின் மூலம் பயன் அடைந்த திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. தேசப்பன் என்பவர் கூறுகையில்,

'என் பெயர் தேசப்பன், நான் ஒரு வியாபாரியிடம் கடன் வாங்கி இருந்தேன். அதனால் வியாபாரி நிர்ணயம் செய்த விலையில் தான் நான் பிடித்து வந்த மீன் மற்றும் இறால்களை விற்பனை செய்யும் நிலை இருந்தது. அதனால் எனக்கு மிகவும் குறைவான வருமானம் கிடைத்தது. இந்நிலையில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டத்தின் கீழ் உள்ள திருவள்ளூர் மாவட்ட மீனவர் விற்பனை சங்கத்தின் மூலம் எனக்கு கடன் மீட்பு நிதி வழங்கப்பட்டது, அதைக் கொண்டு என் கடனை அடைத்து விட்டேன். மீனவர் விற்பனை சங்கத்தின் மூலம் மீன்களை பொது ஏலத்தில் விடப்படுவதால், நான் பிடித்து வரும் மீன்களுக்கு நியாயமான அதிகபட்ச விலையை எந்த வியாபாரி நிர்ணயம் செய்கிறாரோ அந்த வியாபாரியிடமே மீன் மற்றும் இறால்களை விற்பனை செய்து வருகிறேன். நான் பெருங்கடனில் இருந்து மீட்சி பெற்றதால், எனக்கு முன்பைவிட தற்போது 20 சதம் முதல் 25 சதம் வரை கூடுதல் வருமானம் கிடைக்கிறது.

என்னுடைய பொருளாதாரம் வளர்ச்சி அடைந்ததோடு மட்டுமல்லாமல், சேமிக்கின்ற பழக்கமும் உருவானது. இந்த விற்பனை சங்கத்தில் சேர்ந்ததால் நானும், என்னுடைய குடும்பமும் பொருளாதார வளர்ச்சி பெற்று மன நிறைவோடு இருக்கின்றோம்' என்று தேசப்பன் மகிழ்ச்சியுடன் கூறுகிறார். ■

கன்னியாகுமரி மாவட்டத்தில்

குறுந்தொழில்களுக்கான ஒருநாள் கருத்துப் பட்டறை

கன்னியாகுமரி மாவட்டத்தில் 2013–2014ஆம் ஆண்டில் 35 தொழில்களுக்கும், 2015–2016ஆம் ஆண்டில் 65 தொழில்களுக்கும் நாபின்ஸ் நிறுவனம் மூலம் கடன் வழங்கப்பட்டு, அந்தக் குறுந்தொழில்கள் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன.

கன்னியாகுமரி மாவட்ட சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் குறுந்தொழில்களின் வளர்ச்சியில் நாபின்ஸ் நிறுவனத்தின் பங்கு, முதலீடு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகள், அவற்றின் நிறைகுறைகள் தொடர்பான ஒருநாள் கருத்துப் பட்டறை நாகர்கோவிலில் 25.06.2015 அன்று திரு. லெட்சுமி நாராயணன் (முதுநிலை ஊரக நிதி மேலாளர்) தலைமையில் நடைபெற்றது.

இக்கருத்துப் பட்டறையில் திரு. வினோத் (துணைப் பொது மேலாளர், நாபின்ஸ் நிறுவனம், பெங்களூரு), திருமதி. எஸ். உமா மகேஸ்வரி (கன்னியாகுமரி மாவட்ட செயலாக்க அலுவலர்) மற்றும் பிற அலுவலர்கள், திரு. பி. இம்மானுவேல் ராஜா (மாவட்ட மேலாளர், நாபின்ஸ் நிறுவனம்), தொழில் ஆலோசகர்கள் டாக்டர் பிரேம்நாத், திரு. ரமேஷ் கண்ணா, குறுந்தொழில் கடன் பெற்று பயன் பெறும் பயனாளிகள் மற்றும் அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதுநிலை ஊரக நிதி மேலாளர் திரு. லெட்சுமி நாராயணன் அவர்கள் திட்ட செயல்பாடுகள் குறித்து எடுத்துரைத்து, குறுந்தொழில்கள் மேலும் வளர்ச்சி அடைவதற்கும், தொழில் விரிவடைய செய்வதற்கும் தகுந்த ஏற்பாடுகள் செய்து தருவதாகவும் உறுதியளித்ததுடன், குறுந்தொழில்கள் அனைத்தும் நல்ல முறையில் இயங்க முயற்சிக்க வேண்டும் என பயனாளிகளுக்கு கோரிக்கை விடுத்தார்.

நாபின்ஸ் நிறுவனத்தின் துணைப் பொது மேலாளர் திரு. வினோத் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் குறுந்தொழில்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வித நிலுவையும் இன்றி வரப்பெறுவதாகவும், அதனால் இதுபோன்ற நிறைய தொழில்கள் துவங்க மேலும் கடன் வழங்க தம் வங்கி தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

தொழில் ஆலோசகர்கள் டாக்டர். பிரேம்நாத் மற்றும் திரு. ரமேஷ் கண்ணா ஆகியோர், கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்று வரும் தொழில்கள் குறித்த நிறை குறைகளை விளக்கியதோடு, மேற்படி தொழில்களை எவ்வாறு முன்னேற்றம் பெறச் செய்யலாம் என்பது குறித்தும் ஆலோசனைகளை வழங்கினர்.

பின்னர் நாபின்ஸ் நிறுவனம் மூலம் கடன் பெற்ற பயனாளிகள் ஒவ்வொருவரும் தனித் தனியாக தங்களின் முந்தைய குடும்ப நிலையையும், கடன் பெற்று தொழில் தொடங்கிய பின் தங்கள் குடும்பங்கள் மிகுந்த முன்னேற்றம் அடைந்திருப்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கூட்டுப் பொறுப்புக் குழு அமைத்து, அவற்றிற்கு கடன் பெற்று தருவது, அவர்கள் தொழில் செய்வதை கண்காணிப்பது மற்றும் கடனைத் திரும்ப செலுத்துவது வரையிலான தங்களது கடமைகளையும், அதனை அவர்கள் தங்களது பகுதியில் எவ்வாறு செய்கிறார்கள் என்பதையும் இக்கூட்டத்தில் பகிர்ந்து கொண்டனர். ■

சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் பெற்ற வாழ்வாதாரம்

எனது பெயர் ஆரோக்கிய டாலி, நான் +2 படித்து விட்டு, பெண்கள் அழகுக் கலை பயிற்சி முடித்துள்ளேன். எனது கணவர் மீன்பிடி தொழில் செய்து வருகிறார். எனக்கு அழகுக் கலை தொழிலில் நல்ல அனுபவம் இருந்தும் முதலீடு செய்ய பணம் இல்லை. இந்நிலையில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் கூட்டுப் பொறுப்புக் குழுவிற்கு தொழில் கடன் கொடுப்பதாக அக்குழுவில் அங்கத்தினராக இருக்கும் மிஸ்ரா சுய உதவிக் குழு மூலம் அறிந்தேன். என்னுடன் சேர்ந்து தொழில் செய்ய ஆர்வமாக ஐடா குயினும், ஹெலனும் முன்வந்தார்கள். நாங்கள் மிஸ்ரா கூட்டுப் பொறுப்புக் குழுவை ஆரம்பித்து, வங்கியில் கணக்குத் துவங்கி, ரூ. 9 ஆயிரம் முதலீடு செய்தோம்.

பின்னர் நபார்டு நிதி நிறுவனம் மூலம் எங்களுக்கு ரூ. 1,61,500/– கடன் உதவி வழங்கப்பட்டது. நாங்கள் 3 பேரும் 2 கடைகளை வாடகைக்கு எடுத்து, ஒன்றில் பெண்கள் அழகு நிலையமும், மற்றொன்றில் பேன்சி பொருட்கள் விற்பனை செய்யும் கடையையும் துவக்கினோம். கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து இதுவரை ரூ. 14,646/– கடன் செலுத்தியுள்ளோம். எங்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 3,500/– வரை வருவாய் கிடைக்கிறது. சுனாமியால் வாழ்வாதாரங்களை இழந்த எங்கள் 3 குடும்பங்களுக்கு சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தினால் வளமான வாழ்வாதாரம் மீண்டும் கிடைக்கப் பெற்றது குறித்து மிக்க மகிழ்ச்சி. ■

– ஆரோக்கிய டாலி

நபார்டு நிதி நிறுவனம் மூலம் எங்களுக்கு ரூ. 1,61,500/– கடன் உதவி வழங்கப்பட்டது. நாங்கள் 3 பேரும் 2 கடைகளை வாடகைக்கு எடுத்து, ஒன்றில் பெண்கள் அழகு நிலையமும், மற்றொன்றில் பேன்சி பொருட்கள் விற்பனை செய்யும் கடையையும் துவக்கினோம்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டம் விரிவாக்கம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழகத்தின் கடலோர கிராம மக்களுக்குத் தேவையான உட்கட்டமைப்புகள், குறுந்தொழில் மேம்பாடு, துயர் குறைப்பு நிதி, காப்பீட்டுத் திட்டம், இலவச தொழிற்பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு, மீன்பிடி தொழில் செய்யும் மீனவர்களுக்கு பயிற்சி மற்றும் உபகரணங்கள் வழங்குதல், கடன் மீட்பு நிதி வழங்குதல் போன்ற பல திட்டங்கள் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியால் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்ட திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள கடலோரப் பகுதிவாழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் மூலம் 2008ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் வாயிலாக பல்வேறு நலத்திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடலோர கிராம மக்களுக்குத் தேவையான உட்கட்டமைப்புகள், குறுந்தொழில் மேம்பாடு, துயர் குறைப்பு நிதி, காப்பீட்டுத் திட்டம், இலவச தொழிற்பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு, மீன்பிடி தொழில் செய்யும் மீனவர்களுக்கு பயிற்சி மற்றும் உபகரணங்கள் வழங்குதல், கடன் மீட்பு நிதி வழங்குதல் போன்ற பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகளை வருடாந்திர ஆய்வு மேற்கொண்ட பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியம், இத்திட்டம் தமிழக அரசால் சிறப்பாக செயல்படுத்தப்படுவதைக் கண்டு, திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மேலும் ஆறு மாவட்டங்களுக்கு சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தை விரிவுபடுத்த ஆலோசனை நல்கியது.

இதற்கான புதிய திட்டத்துக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் இத்திட்டத்தை அடுத்த நிதியாண்டில் இருந்து மேற்படி ஆறு மாவட்டங்களில் செயல்படுத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இத்திட்டம் செயல்பாட்டுக்கு வரும் பட்சத்தில், மேற்கூறிய 6 மாவட்டங்களில் உள்ள கடலோர பகுதி வாழ் மக்களின் வாழ்வாதாரம் செழிப்படையும் என்பதில் ஐயமில்லை. ■

கலந்தாய்வுக் கூட்டம்

மாநில அளவிலான அனைத்து மாவட்ட ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்களின் இயக்குநர்கள் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் அனைத்து மாவட்ட திட்ட இயக்குநர்களின் கலந்தாய்வுக் கூட்டம், 20.06.2015 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தலைமையகத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்தாய்வுக் கூட்டத்தில் வருங்கால திட்ட நடவடிக்கைகள், செயல்பாடுகள் குறித்தும், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களிலிருந்து பயிற்சி பெற்றவர்களுக்கான பயிற்சி செலவுகளை ஈடு செய்தல், பயிற்சி நிறுவனத்திற்கான இடம் ஒதுக்கீடு மற்றும் கட்டிடம் கட்டுதல், மாவட்ட வளங்களின் அடிப்படையில் புதிய வேலைவாய்ப்பு பயிற்சிகள் நடத்துதல் மற்றும் பல்வேறு செயல்பாடுகள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மத்திய அரசு தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தேசிய மேலாளர் திரு. இராஜன்பாபு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர்கள் திரு. ட்டி. ஆர். வேதநாயகம், திருமதி. எம். மாதவி, மாநில வங்கியாளர்களின் கூட்டமைப்பு தலைவர் திரு. சாரங்கி மற்றும் பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இந்தியன் வங்கி ஆகியவைகளின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். ■

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியாய் 'தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்' இதழ் விளங்கி வருவது உங்கள் அனைவருக்கும் தெரியும். பயனுள்ள கட்டுரைகள், வெற்றிக் கதைகள், பொது அறிவு செய்திகள், மருத்துவம், சமையல் மற்றும் அழகுக் குறிப்புகள் போன்ற அனைத்து அம்சங்களும் கொண்ட முற்றம் இதழிற்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	ரூ. 150/–
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 300/–
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 450/–

விளம்பரக் கட்டணங்கள் விபரம்

அட்டையில்	ரூ. 45,000/–
அட்டையின் 2வது பக்கம்	ரூ. 37,500/–
அட்டையின் 3வது பக்கம்	ரூ. 30,000/–
அட்டையின் பின்பக்கம்	ரூ. 30,000/–
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 30,000/–

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' என்ற பெயரில், சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும்.

வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில்

மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் சார்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் தனிநபர் கடனுதவிகள் வழங்கும் நிகழ்ச்சி 09.06.2015 அன்று கீரனூர் ஆனந்த் திருமண மண்டபத்தில் மாவட்ட ஆட்சியர் திரு. கணேஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், 158 மாற்றுத் திறனாளி சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 18 இலட்சத்து 95 ஆயிரம் மதிப்பில் தனிநபர் கடனுதவிகளும், 23 மாற்றுத் திறனாளி சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 2 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பிலான வங்கிக் கடனுதவியும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 3 மாற்றுத் திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகளும், 8 மாற்றுத் திறனாளிகளுக்கு காதொலி கருவிகளும், 10 நபர்களுக்கு கருப்பு கண்ணாடிகள் மற்றும் மடக்கு ஊன்றுகோல்கள் என மொத்தம் ரூ. 21 இலட்சத்து 65 ஆயிரத்து 100 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாநில புதுவாழ்வு திட்ட கூடுதல் திட்ட இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திருமதி. வசுமதி, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் திரு. சரவணக்குமார், உதவித் திட்ட மேலாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், 158 மாற்றுத் திறனாளி சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 18 இலட்சத்து 95 ஆயிரம் மதிப்பில் தனிநபர் கடனுதவிகளும், 23 மாற்றுத் திறனாளி சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. இரண்டு இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பிலான வங்கிக் கடனுதவியும் வழங்கப்பட்டன

தருமபுரி மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் ஆய்வு

தருமபுரி மாவட்டத்தில்

கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்குக் கடனுதவி

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம், இலளிகம் மற்றும் டொக்குபோதனஅள்ளி ஆகிய ஊராட்சிகளில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை மாநில புதுவாழ்வு திட்டத்தின் கூடுதல் திட்ட இயக்குநர் திரு. ஆர். ராஜசேகர் அவர்கள், 03.07.2015 அன்று ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் இலளிகம் மற்றும் டொக்குபோதனஅள்ளி ஆகிய ஊராட்சிகளில் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுமானப் பணிகள் ஆய்வு செய்யப்பட்டு, பயனாளிகளுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் ஏழை மகளிரை குடும்பத் தலைவியாகக் கொண்ட குடும்பப் பெண்களுக்கு வழங்கப்படும் சிறப்பு வாழ்வாதாரத் திட்டத்தைப் பற்றி உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. டொக்குபோதனஅள்ளி ஊராட்சியில் தனிநபர் இல்ல கழிப்பறை கட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினைச் சேர்ந்த 25 உறுப்பினர்களுக்கு தலா ரூ. 5,000/– வீதம் ரூ. 1,25,000/– கடனுதவி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் தருமபுரி மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. சீனு. நாராயணன், இலளிகம் மற்றும் டொக்குபோதனஅள்ளி ஆகிய ஊராட்சி மன்றங்களின் தலைவர்கள், புதுவாழ்வுத் திட்ட உதவித் திட்ட மேலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி

தமிழகத்தைதிறந்தவெளி மலம்கழிக்கும்பழக்கம்அற்ற மாநிலமாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2015–16ஆம் ஆண்டு வரவு – செலவு திட்ட உரையில், 15 இலட்சம் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்படும் என்று தெரிவித்துள்ளார்கள்.

அதனடிப்படையில் திருவள்ளூர் மாவட்டத்தில் தூய்மை பாரத இயக்கம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 45,246 தனிநபர் இல்லக் கழிவறைகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் புதுவாழ்வு திட்டம் செயல்படும் ஒன்றியங்களுக்கு 16,056 தனிநபர் இல்லக் கழிவறைகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் 18.06.2015 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் திரு. கோ. வீரராகவராவ், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, புதுவாழ்வு திட்டம் மற்றும் ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் தேர்வு செய்யப்பட்டுள்ள 480 பயனாளிகளுக்கு தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்காக ரூ. 26,80,000/– வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ச.சா. குமார், மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் திரு. சி. கா. வீரணன், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திருமதி. எஸ். சிவகாமி கிருஷ்ணா, உதவித் திட்ட மேலாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

மானியம் – கடனுதவி வழங்குதல்

வேலூர் மாவட்டத்தில், புதுவாழ்வு திட்டம் செயல்படும் குடியாத்தம், ஆலங்காயம், மாதனூர், பேர்ணாம்பட்டு மற்றும் திமிரி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்காக,

கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் பல்வேறு விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கு ஒவ்வொரு பயனாளிக்கும் ரூ. 12,000/– மானியம் வழங்கப்படுகிறது. பயனாளிகளுக்கு கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு சார்பில் தலா ரூ. 5000/– வரை சிறு கடனும் வழங்கப்படுகிறது.

மேற்கண்ட ஒன்றியங்களில் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு மானியம் மற்றும் சிறுகடன் தொகைகளுக்கான காசோலைகளை மாவட்ட ஆட்சியர் முனைவர் இரா. நந்தகோபால், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் திரு. மனோகர சிங், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. சம்பத்குமார் மணி மற்றும் உதவித் திட்ட மேலாளர்கள் கலந்து கொண்டனர். ■

மின்னணு இந்தியா வார துவக்க விழா

நாமக்கல் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் செயல்படும் ஒன்றியங்களில் 02.07.2015 அன்று மின்னணு இந்தியா வார துவக்க விழா நடைபெற்றது. இவ்விழாவில் அனைத்து கணக்காளர்கள், திட்டப்பணியாளர்கள் மற்றும் கூட்டமைப்பு நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இதன் முக்கிய நிகழ்வாக அனைத்து கிராம கற்றல் மையங்களின் தற்போதைய நிலை குறித்து ஆய்வு செய்யப்பட்டு அதற்காகத் திட்டமிடப்பட்டது. குறிப்பாக கணினி பராமரிப்பு, இணையதள இணைப்பில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்தல், ஸ்கைப் (SKYPE) மூலம் தொடர்பு கொண்டு பேசும் வசதியை தொடர்ந்து பயன்படுத்துதல், மின் ஆளுமை திட்டத்தின் செயல்பாடு மற்றும் பயன்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. அனைத்து ஊராட்சிகளுக்கும் இது குறித்து துண்டு பிரசுரம் வழங்கப்பட்டது. சான்றிதழ்கள் தேவைப்படுவோரின் விபரங்கள் 03.07.2015 முதல் 07.07.2015 வரை சேகரிக்கப்பட்டு, கள அளவில் தொகுக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் நிறைவு விழா 08.07.2015 அன்று தேசிய தகவல் மைய அலுவலர் திரு. செல்வகுமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் (CSC) மையங்களின் செயல் திறனை மேம்படுத்துதல், டிஜிட்டல் லாக்கர் வசதி உருவாக்குவது குறித்தும் செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. ■

தனிநபர் கழிப்பிடம் கட்ட கடனுதவி

விருதுநகர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் செயல்படும் ஒன்றியங்களில் தனிநபர் கழிப்பிடம் கட்டும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற சிறப்பு கிராம சபைக் கூட்டம் மற்றும் ஊராட்சி அளவிலான பொதுக்குழு கூட்டத்தில் 620 நபர்களுக்கு நிர்வாக உத்தரவும், 504 நபர்களுக்கு கழிப்பறை கட்ட ரூ. 5000/– வீதம் கடனுதவியாக ரூ. 25,20,000/–ம் வழங்கப்பட்டது.

என்.மேட்டுப்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற கடனுதவி வழங்கும் நிகழ்ச்சிக்கு என்.மேட்டுப்பட்டி ஊராட்சி தலைவர் திரு. கருப்பசாமி தலைமை வகித்தார். மதுரை மண்டல தொழிலாளர் துணை ஆணையர் திரு. ராமகிருஷ்ண பாண்டியன், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. சண்முகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்து கடனுதவியினை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் விருதுநகர் மாவட்ட தொழிலாளர் ஆய்வாளர் திருமதி. மைவிழி செல்வி, புதுவாழ்வு திட்ட உதவித் திட்ட மேலாளர் திரு. வெள்ளப்பாண்டி, விருதுநகர் மாவட்ட தேசிய குழந்தைகள் பாதுகாப்பு திட்ட இயக்குநர் திரு. நாராயணசாமி, மாவட்ட தொழிலாளர் துணை ஆய்வாளர் மின்னல்கொடி, புதுவாழ்வு திட்ட அணித்தலைவர் திரு. சக்கரவர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

சாதி சான்றிதழ்

1. பள்ளி மாற்றுச் சான்றிதழ் (TC)
2. தாய் / தந்தை சாதிச் சான்று
3. குடும்ப அட்டை

இருப்பிடச் சான்றிதழ்

1. குடும்ப அட்டை

முதல் பட்டதாரி சான்றிதழ்

1. குடும்ப அட்டை
2. குடும்ப உறுப்பினர் கல்வி குறித்த விபரம்
3. தாய் / தந்தை உறவு வழி குடும்ப அட்டை
4. பள்ளி மாற்றுச் சான்றிதழ் (TC) மதிப்பெண் பட்டியல்

வருமானச் சான்றிதழ்

1. குடும்ப அட்டை
2. அரசு / தனியார் நிறுவன வருமானச் சான்று
3. தொழில், வருமானம் பற்றிய விபரம், நிலம் பற்றிய விபரம்
4. பெற்றோர் – தொழில் / பணி விவரம்

கணவனால் கைவிடப்பட்டவர் சான்றிதழ்

1. குடும்ப அட்டை
2. வருமானம் பற்றிய விபரம்
3. நிலம் / சொத்து விபரம்
4. விவாகரத்து குறித்த நீதிமன்ற தீர்ப்பு

சான்றிதழ்களைப் பெற கொண்டு வர வேண்டிய ஆவணங்கள் (அசல் மட்டும்)

மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட நலிவுற்ற குடும்பங்களுக்கான சிறப்புத் திட்டம்

செயல்படுத்துவது குறித்த விளக்கக் கூட்டம்

திண்டுக்கல்

திண்டுக்கல் மாவட்டம், பழனி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 17.07.2015 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டும் பயனாளிகளுக்கு கடனுதவியும், 3 சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பும், 6 நபர்களுக்கு தனிநபர் கடன் உதவியும் வழங்கினார்.

அதைத் தொடர்ந்து நடைபெற்ற சிறப்பு வாழ்வாதாரத் திட்டத்தை செயல்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் திண்டுக்கல் மாவட்ட வாழ்வாதார திட்ட இயக்குநர் திருமதி. கோகிலா, மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர், மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் தலைமை அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

தேனி

7.07.2015 அன்று தேனி மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் நடைபெற்ற சிறப்பு வாழ்வாதாரத் திட்டம் குறித்த கூட்டத்தில் மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் வாழ்வாதார திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

இக்கூட்டத்தில் மகளிர் திட்ட இயக்குநர் திருமதி. ஜா. உஷாதேவி, ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு. முருகேசன், மக்கள் தொடர்பு அலுவலர் திரு. தங்கவேலு, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், நகராட்சிகளின் ஆணையாளர்கள் மற்றும் பேரூராட்சிகளின் அலுவலர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்திற்கு பின்னர் முதன்மை செயல் அலுவலர் அவர்கள், பழனிசெட்டிப்பட்டி பிளாஸ்டிக் மறுசுழற்சி மையத்தை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். ■

சிவகங்கை

சிறப்பு வாழ்வாதாரத் திட்டம் குறித்த கூட்டம் 18.07.2015 அன்று மாவட்ட ஆட்சியர் திருமதி. எஸ். மலர்விழி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் இக்கூட்டத்தில் கலந்துக் கொண்டு திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் செயல்பாடுகள் குறித்து விரிவாக உரையாற்றினார். காரைக்குடி, தேவகோட்டை மற்றும் சிவகங்கை ஆகிய மூன்று நகராட்சிகளின் ஆணையாளர்கள், 12 பேரூராட்சிகளின் நிர்வாக அலுவலர்கள், மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் திருமதி. எஸ். சரோஜாதேவி, புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. அசோக்குமார், மாவட்ட சமூக நல அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட ஊனமுற்றோர் நல அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அசோலா மிகவும் அதிக அளவு சுமார் 20 சதவீதம் புரதச் சத்தினைக் கொண்டுள்ள ஒரு சத்துணவாகும்.

அசோலா

கால்நடைகளுக்கு ஒரு எளிய தீவனம்

அசோலா – கால்நடைகளுக்கு குறிப்பாக கறவை மாடுகளுக்கு ஒரு எளிய தீவனமாக உள்ளது. ஏனெனில் இதனை சுலபமாக வளர்க்க முடியும். அதன் உற்பத்தி செலவும் குறைவாகவே உள்ளதால், பல மாநிலங்களில் இதனை கால்நடைகளுக்குத் தீவனமாக அளிப்பது வழக்கத்தில் உள்ளது. கால்நடைகளுக்கு உரிய பசுந்தீவனத்தின் உற்பத்தி வெகுவாக குறைந்துள்ள நிலையில், அசோலாவினை உற்பத்தி செய்து, தீவன செலவினை குறைக்க கறவைப் பசுக்களை வளர்ப்போர் தெரிந்து கொள்வது அவசியம்.

அசோலா மிகவும் அதிக அளவு சுமார் 20 சதவீதம் புரதச் சத்தினைக் கொண்டுள்ள ஒரு சத்துணவாகும். இதில் அமினோ அமிலம், கேரோடின் சத்து மற்றும் வைட்டமின் ஏ போன்றவை அதிகம் உள்ளதால், இதனை உட்கொண்ட பசுவின் பாலில் கொழுப்பு சத்து அதிகரித்தும், பாலின் தரம் உயரவும் வாய்ப்புள்ளது. தினசரி 1.5 கிலோவிலிருந்து 2 கிலோ அசோலா அளிக்கும் போது பால் உற்பத்தி சுமார் 15 சதவீதம் உயரும் என கண்டறியப்பட்டுள்ளது.

அசோலாவினை நிழலில் மரத்திரையில் வளர்க்கலாம். ஒரு பாலித்தீன் தார்பாலின், தரையில் 6 அடி x 4 அடி x 2.5 அடி ஆழத்தில் அல்லது 12 அடி x 4 அடி x 2 அடி குழி அமைத்து, அதில் வளர்க்கலாம். இதற்கு குழியின் ஆழம் சமமாக இருத்தல் அவசியம்.

தார்ப்பாலின் மீது, சுமார் 10லிருந்து 15 கிலோ அளவில் விளைச்சல் மண்ணினை பரவலாகப் போட வேண்டும். அதன் மீது, 2 கிலோ மாட்டுச்சாணம், 30 கிராம் சூப்பர் பாஸ்பேட் ஆகியவற்றை, 10 லிட்டர் தண்ணீரில் கலந்து, மண்ணின் மீது கரைசலாகப் பரப்ப வேண்டும். 4 அங்குல அளவிற்கு தண்ணீர் ஊற்ற வேண்டும்.

அரை கிலோவிலிருந்து 1 கிலோ அளவிற்கு அசோலா பயிரினை விதைக்க வேண்டும். 10 நாட்களுக்குள் இது குழியின் அனைத்துப் பகுதிகளிலும் பரவிக் காணப்படும். இதிலிருந்து ஒரு நாளைக்கு 500லிருந்து 600 கிராம் அசோலா அறுவடை செய்யலாம்.

வாரம் ஒருமுறை 1 கிலோ மாட்டுச் சாணத்துடன், 20 கிராம் சூப்பர் பாஸ்பேட் சேர்த்தால் அசோலா நன்கு படர்ந்து வளர உதவுவதுடன், அசோலா பழுப்பு நிறம் அடையாமலும் இருக்க உதவும். பத்து நாட்களுக்கு ஒருமுறை நான்கில் ஒரு பங்கு அளவிற்கு தண்ணீரை மாற்ற வேண்டும்.

நெல் விளையும் வயல்வெளிகளில் இவை இயல்பாகவே ஊடுபயிராக வளர்ந்து காணப்படும். இதனைப் பறித்து தண்ணீரில் நன்கு அலசி, ஒரு கிலோவிற்கு ஒரு கிலோ என்ற அளவில் அடர் தீவனத்தில் கலந்து கால்நடைகளுக்கு அளிக்கலாம்.

புதிதாக மாடுகளுக்கு அசோலா தீவனத்தை அளிக்கும்போது, சிறிதளவு சமையல் உப்பு சேர்த்து அளித்து பழக்கப்படுத்தலாம்.

பசுந்தீவனம் பயிரிட முடியாத நிலையில் அசோலா ஒரு சிறந்த மாற்றுத் தீவனம் என்பதனால் தார்பாலின் வாங்க அரசு மான்யம் வழங்கப்படுகிறது. இதுபற்றி மேலும் விவரங்களுக்கும், செயல்முறைக்கும் உங்கள் புதுவாழ்வு திட்ட மாவட்ட பால்வள ஆலோசகர் அல்லது உள்ளூர் கால்நடை மருத்துவரை அணுகவும். ■

முனைவர். வெ. புருஷோத்தமன்,
வணிக மேம்பாடு மற்றும்
கூட்டண்மை வல்லுநர் 2
புதுவாழ்வு திட்டம்.

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From TNCDW, Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai – 600 034 (60,500 Copies circulated) an Printed by C. JEBAMANI, CANAAN PRESS PRIVATE LTD., No. 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor: S.CHINNAPPAN.

Department of Financial Services
Ministry of Finance
Government of India
இந்தியன் வங்கி
इंडियन बैंक
Indian Bank
PRADHAN MANTRI JAN-DHAN YOJANA
MERA KHATA BHAGYA VIDHATA
உங்களின் வங்கி கணக்கு
இப்போது பாதுகாப்பின் ஆதாரம்
பிரதம மந்திரி
சுரக்ஷா பீமா யோஜனா
பிரதம மந்திரி
ஜீவன் ஜோதி பீமா யோஜனா
அடல்
பென்ஷன் யோஜனா
திட்டத்தின் பலன் பெற இன்றே பதிவு செய்யுங்கள்.
மேலும் விவரங்களுக்கு அருகிலுள்ள இந்தியன் வங்கி கிளையை அணுகவும்

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 498 / 2012
Reg. No. TN/CH/(C)/455/15-17 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2015 - 17
Date of Publication 22.07.2015

திறந்தவெளி மலம் கழிக்கும் பழக்கம் அற்ற நிலையை நோக்கி..... தமிழகம்

தனிநபர் இல்லக் கழிப்பறை திட்டம்

கிராம சபை கூட்டத்தில் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவது குறித்து தீர்மானம் நிறைவேற்றுதல்.

கழிப்பறை அவசியம் குறித்து விழிப்புணர்வு பிரச்சாரம்


கழிப்பறை அவசியம் மற்றும் அரசு மானியம் குறித்து இல்லந்தோறும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

தனிநபர் இல்லக் கழிப்பறை விண்ணப்பம் கிடைக்கும் இடங்கள்.

தனிநபர் இல்லக் கழிப்பறை வேண்டி விண்ணப்பித்தல்.


விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து ஊராட்சித் தலைவர் பணி உத்தரவு வழங்குதல்.


பணி ஆரம்பிக்கும் முன் இடத்தினை குறியீடு செய்தல். (Marking of the Site).

தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கு முன்பு பயனாளியுடன் புகைப்படம் எடுத்தல்.


தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டும் பணி நடைபெறுதல்.


அடித்தளம் முடித்த பிறகு முதல் தவணை விடுவிக்க அளவீடு செய்தல்.


இரண்டு உறிஞ்சிக் குழியுடன் முடிக்கப்பட்ட பணியை அளவீடு செய்தல்


தனிநபர் இல்லக் கழிப்பறை பணி முடிக்கப்பட்ட பின் பயனாளியுடன் இரண்டாவது புகைப்படம் எடுத்தல்.


தனிநபர் இல்லக் கழிப்பறை – இறுதி தவணை விடுவித்தல்.


கழிப்பறை கட்டி முடித்து ஆறுமாதம் மற்றும் ஒரு ஆண்டு முடிவில், ஊக்கத்தொகையின் முதல் மற்றும் இரண்டாம் தவணையை விடுவிக்க வட்டார அளவிலான குழு ஆய்வு செய்தல்.

திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற நிலையை அடைந்த கிராம ஊராட்சி.

சிறப்பாக பணியாற்றிய கிராம ஊராட்சி தலைவர் மற்றும் களப்பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பரிசு வழங்குதல்.

பொது சுகாதாரம் காத்திடுவோம்!
தூய்மையான தமிழகம் படைத்திடுவோம்!!